# பொறியியல் மாணவர் தெரிவில் பாரபட்சமில்லை!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றேட்,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் : 49
போன் : 389
மலர் 12
இதழ் 237
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் புரட்டாதி 18 ஷஃபான் 4 செவ்வாய்க்கிழமை (6-10-70)

கேட்டு வாங்குங்கள்
சங்கு மார்க்
பித்தளைப் பிணைச்சல்கள்
இரண்டுபக்கமும் தறையப்பட்டது
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130

## விசாரணைக் குழு அறிக்கை

கோட்டை, திங்கள்

பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்கு பொறியியலில் தோற்றிய தமிழ் மாணவர்களது விடைத்தாள்கள் பாரபட்சமான முறையில் திருத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. எனவே ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட தமிழ் மாணவர்கள் அத்தனை பேரும் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பகுதியில் அனுமதிக்கப்படுவர். புதிதாக இப்பொறியியல் மாணவர்களுக்குப் பரீட்சை எதுவும் நடைபெறமாட்டாது.

இந்த முடிவு மேற்படி மாணவர்களின் விடைத்தாள்களை மறுபரிசீலனை செய்யுமாறு கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத்தினால் அமைக்கப்பட்ட விசேஷ குழுவினாலும் வெளியிடப்பட்டுள்ளது.

பேராதனைப் பொறியியல் பிரிவுக்கு 155 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். இவர்களது தெரிவு பாரபட்சமான முறையில் விடைத்தாள்கள் தெரிவுசெய்யப்பட்டு நடைபெற்றது எனப் புகார்கள் கல்வியமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது வாசக நேயர்கள் அறிந்ததே.

இந்தப் புகார்களைத் தொடர்ந்து மந்திரிசபையும் கல்வியமைச்சரை விசேஷ குழு ஒன்றை நிறுவி இந்த விடயத்தை ஆராயும்படி உத்தரவிட்டது.

கல்வியமைச்சர் நியமித்த விசேஷ குழுவில் பின்வருவோர் இடம்பெற்றனர்.

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் பி ஏ. அபேவிக்ரம (தலைவர்), பேராசிரியர் பி டபிள்யு ஒபசிங்கா, பேராசிரியர் டாக்டர் எம் ஏ. வி. தேவானந்தா, திரு டி பி நாணயக்காரா.

இக்குழு தனது முடிவை கல்வியமைச்சரிடம் சமர்ப்பித்தது.

# அடக்கப்பட்ட சிறுமியின் சடலம் தோண்டி எடுத்து மறு பரிசோதனை

## ஆனாலும் மரணம்பற்றிய நிலை தெளிவாகவில்லை

யாழ்ப்பாணம், செவ்.

வண்ணார்பண்ணை இல்லனர் ஒழுங்கைப் பாடசாலைக் கிணற்றுள் இறந்து கிடந்து காணப்பட்ட சிறுமி நாகேஸ்வரியின் சடலம் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து நேற்று வெளியேஎடுக்கப்பட்டு, மீண்டும் இரண்டாவது தடவையாக சட்ட வைத்திய அதிகாரியினால் பிரேதபரிசோதனை செய்யப்பட்டது. 10 பேர் கொண்ட பொதுமக்கள் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தாக்கல்செய்து கொண்ட மனுவைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் திரு டயஸ் பிரேதத்தை தோண்டி எடுத்து மீண்டும் பரிசோதனைசெய்யும்படி உத்தரவிட்டார்.

நேற்றுக்காலை 10-45 மணியளவில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ராஜேஸ்வரனின் முன்னிலையில் சிறுமியின் பிரேதம் புதைகுழியிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் பதில் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பாலசிங்கத்தினால் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

கிணற்றுள் இறந்துகிடந்த சிறுமி நாகேஸ்வரியின் மரணத்தில் சிறுமியின் தந்தை சந்தேகம்தெரிவித்ததைத் தொடர்ந்து மரண விசாரணை நடத்திய திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு இராசநாயகம் பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார். பிரேத பரிசோதனை நடாத்திய பதில்சட்டவைத்திய அதிகாரி டாக்டர் திருநாவுக்கரசு மரணவிசாரணை அதிகாரியிடமும் பொலிசாரிடமும் தெரிவித்த கருத்துக்கள் வேறுபட்டிருந்ததாகவும் இதைத் தொடர்ந்தே சிறுமியின் சடலத்தை மீண்டும் பரிசோதனைசெய்ய அனுமதிக்கவேண்டுமென கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்திருந்தனர்.

சியினால் இடைநடுவில் சிறுமி இறந்திருக்கலாம் என்றும் கிணற்றுள் வீழ்ந்து மூழ்கியதால் மரணம் ஏற்படவில்லை என்றும் சட்டவைத்திய அதிகாரி நேற்றைய பரிசோதனையின் பின்னர் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளாராம்.

கிணற்றுள் வீழ்ந்து நீரில் மூழ்கியதால் மரணம் சம்பவிக்கவில்லை என்றும் வயிற்றுள் தண்ணீர் காணப்படவில்லை என்றும் முன்னர் பிரேத பரிசோதனை செய்த டாக்டர் தெரிவித்திருந்தார்.

சிறுமியின் சடலத்தில் 2, 3 பற்களைக் காணவில்லை என்றும் இவர் தாக்கப்பட்டதினாலோ அல்லது பிரேதம் புதைக்கப்பட்டு பலதினங்கள் சென்றதாலோ விழுந்திருக்கலாம் என்றும் நேற்று பரிசோதனை செய்த டாக்டர் தெரிவித்துள்ளார்.

கடந்த 24-ம் திகதி புதைக்கப்பட்ட பிரேதம் 10நாட்

## புதியபங்கீட்டு அரிசித் திட்டம்

### உணவுக்கட்டுப்பாடு அதிகாரிவிளக்கம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கடந்தவாரம்முதல் அமுல் நடத்தப்பட்டுவரும் புதிய பங்கீட்டரிசித் திட்டம்பற்றி பொதுமக்களிடம் நிலவிவரும் பல சந்தேகங்களுக்கும் தடுமாற்றங்களுக்கும் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி ஒருவர் விளக்கம் தந்துள்ளார்.

பச்சை அரிசி என்பதற்காகவோ அல்லது பணம் இல்லாததினாலோ அரிசியை வாங்காமல் விட்டவர்களுக்கு அடுத்தவாரம் பணம் கொடுத்து வாங்கும் கூப்பன் புள்ளிக்குரிய அரிசியை வச அரிசியைப் பெற்றுக்கொண்டு, காசுக்குரிய அரிசியை வாங்காமல் விட்டவர்கள் இந்தக் கிழமைக்குரிய முழு அரிசியையும் வாங்க முடியும். அவ்விதம் மறுப்பவர்களைப் பற்றிய தகவல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்கவேண்டும்.'

பச்சைஅரிசி வழங்கப்பட்டபோது பணம் கொடுத்து பச்சைஅரிசி வாங்காமல்விட்டவர்களுக்கு அடுத்தவாரம் நாட்டரிசி வந்தால் கொடுக்கமுடியாதென சில கடைக்

"கட்சியின் முழு நேர ஊழியரல்ல

## உணவு விவசாய இலாகா 25 வது ஆண்டுபூர்த்தி விழா

கொழும்பு, திங்கள்

உணவு விவசாய ஸ்தாபனத்தின் 25 ஆண்டு நிறைவு விழாக்கொண்டாட்டம் இம்மாதம் 16-ம் திகதி பெலங்கடவெலக் குளத்தில் நடைபெறவிருக்கிறது. இதில் நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயகா கலந்துகொள்வார்.

பெலங்கடவெலக் குளம் கிரிவெலத் தொகுதியில் உள்ளது. இக்குளம் 300 ஏக்கர் விஸ்தீரணமுடையது இக்குளத்தைக் கட்டுவதற்கு ரூபா 5,00,000 செலவாயிற்று. இப்பகுதியில் 300குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளனர்.

## 43 பேருக்கு டி. ஆர். பி. ரத்து

கோட்டை, திங்கள்

தற்காலிக வாசபெர்மிட் பெற்று இலங்கையில்வாழும் வெளிநாட்டவர் 43 பேரின் வாச பெர்மிட்டை ரத்துச் செய்யுமாறு வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின குடியேற்ற வெளியேற்ற அலுவலகத்தினரை கோரியுள்ளார்.

இவர்கள் வர்த்தகச் சட்ட

## சின்னமடுத் திருநாள்

நாரந்தனை, செவ்வாய்

சின்னமடு செபமாலை மாதா தேவாலய வருடாந்த உற்சவம் நாளை திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகவோ அல்லது பணம் இல்லாததினலோ அரிசியை வாங்காமல் விட்டவர்களுக்கு அடுத்தவாரம் பணம் கொடுத்து வாங்கும் கூப்பன் புள்ளிக்குரிய அரிசியை வழங்குவதற்கு சில கடைக்காரர் மறுப்புத் தெரிவிப்பதாக கூறப்படுவது சம்பந்தமாக கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

கடந்தவாரம் அரிசி வாங்காமல் விட்டவர்களுக்கு இந்தவாரம் கடந்தவாரத்துக்குரிய அரிசி வழங்கப்படமாட்டாது. ஆனல் இந்த வாரத்துக்குரிய கூப்பன் புள்ளியைக் கொடுத்தால், அதற்குரிய அரிசியைக் கடைக்காரர் வழங்கவேண்டும். கடந்த வாரம் பணம்கொடுத்து அரிசிவாங்கியவர்களுக்கு மட்டுமே இந்தவார பணத்துக்குரிய அரிசி வழங்கப்படும் என்றுகூறுவது தவருகும். கடந்த வாரம் இல பச்சைஅரிசி வழங்கப்பட்டபோது பணம்கொடுத்து பச்சைஅரிசி வாங்காமல்விட்டவர்களுக்கு அடுத்தவாரம் நாட்டரிசி வந்தால் கொடுக்கமுடியாதென சில கடைக்காரர்கள் கூறுவதுபற்றியும் எமது பிரதிநிதி கேட்டபோது உணவுக்கட்டுப்பாட்டதிகாரி கூறியதாவது:-

''பணத்துக்குரிய எந்த அரிசியானலும் சரி வாங்கினலென்ன, வாங்காவிட்டாலென்ன அடுத்த வாரத்துக்குரிய கூப்பன் புள்ளிகளை வெட்டிக் கொடுக்கும்போது அவற்றுக்கான அரிசியை வழங்கவேண்டும் கையிருப்பில் எந்த அரிசி இருக்கிறதோ அந்த அரிசிதான் வழங்கப்படும். உதாரணமாக பச்சை அரிசியும், நட்டரிசியும் கையிருப்பில் இருந்தால் இவ் இரண்டு அரிசியிலும் சம பங்காக வழங்கப்படும்.''

கள் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தாக்கல்செய்து கொண்ட மனுவைத் தொடர்ந்து

பரிசோதனை செய்யப்பட்டது.

கிணற்றுள் இறந்துகிடந்த சிறுமி நாகேஸ்வரியின்

கள் வேறுபட்டிருந்ததாகவும் இதைத் தொடர்ந்தே சிறுமியின் சடலத்தை மீண்டும் பரிசோதனைசெய்ய அனுமதிக்கவேண்டுமென க்கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்திருந்தனர்.

10 பேர் கொண்ட பொதுமக்கள் புறக்டர் லோகேஸ்வரனின் அனுசரணையுடன் அட்வகேட் ஆலாலசுந்தரத்தின் உதவியுடன் மனு ஒன்றை தாக்கல்செய்தனர் வடபகுதி பொலிஸ் அதிபர் மூலம்மாஜிஸ்திரேட்கோர்ட்டில் தாக்கல்செய்யப்பட்ட மனுவை ஏற்றுக்கொண்ட மாஜிஸ்திரேட் பிரேதத்தை மீண்டும் பரிசோதனைசெய்யும்படி உத்தரவிட்டார் இதைத் தொடர்ந்து நேற்று காலை பிரேதபரிசோதனை நடைபெற்றது.

கிணற்றுள் விழுந்து கொண்டிருந்த போது அதிர்ச்

தம் புதைக்கப்பட்டு பலதினங்கள் சென்றதாலோ விழுந்திருக்கலாம் என்றும் நேற்று பரிசோதனை செய்த டாக்டர் தெரிவித்துள்ளார்.

கடந்த 24-ம் திகதி புதைக்கப்பட்ட பிரேதம் 10நாட்களின் பின் மீண்டும் வெளியே எடுக்கப்பட்டதால் பற்கள் விழுந்திருக்கலாமெனவும் டாக்டர் கூறியுள்ளாராம்.

வயிற்றினுள் தண்ணீர் இருந்ததா என்று தற்போது கூறமுடியாதிருப்பதாகவும் கழுத்து நெரித்து இறந்திருந்தால், சதைகள் அழுகியிருப்பதால் அதைத் தெளிவாகக் கூறமுடியாதிருப்பதாகவும் நேற்றைய பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாம்

சிறுமியின் பிரேதம் மீண்டும் கோம்பயன்மணல் மயானத்தில் புதைக்கப்பட்டது.

ரத்துச் செய்யுமாறு வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின குடியேற்ற வெளியேற்ற அலுவலகத்தினரை கோரியுள்ளார்.

இவர்கள் வர்த்தகச் சட்டத்திற்கு மாருக நடந்து கொள்வதினலேயே அவர்கள் மீது இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவர்களின் இரும்பு, சுகாதாரப் பொருட்கள், ஆயுள் வேத மருந்து வகைகள், விளக்குகள் மற்றும் இவை போன்ற 100-க்கு மேற்பட்ட பாவனைப் பொருட்கள் இறக்குமதி கோட்டாக்கள் ரத்துச் செய்யப்பட்டன

இவற்றை தற்காலிகமாக இறக்குமதி செய்வதற்கு இலங்கைப் பிரைஜகளுக்கு அனுமதி வழங்கப்படவிருக்கிறது.

நாரந்தனை, செவ்வாய் சின்னமடு செபமாலை மாதா தேவாலய வருடாந்த உற்சவம் நாளை திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடைகிறது.

## அடிப்படைஉரிமைகள்

கோட்டை, திங்கள்

அடிப்படை உரிமை பற்றிய பிரச்னைக்கு அரசியல் சட்ட அமைப்பு விவகார மந்திரிசபை உபகுழு இன்னமும் ஒரு முடிவுக்கும் வரவில்லை.

புதிய அரசியல் அமைப்பு திட்டத்தில் அடிப்படை உரிமைகள் சாசனம் ஒன்று இடம் பெறுவதா அல்லது அடிப்படை உரிமைகளையுள்ளடக்கிய புறம்பானதொரு உரிமைகள் மசோதா ஒன்றை உருவாக்குவதா என்பது குறித்து மேற்படி குழு விரைவில் முடிவுசெய்யவிருக்கிறது.

# "கட்சியின் முழு நேர ஊழியரல்ல அவர் ஒரு தொழிற்சங்க வாதி"

## சுதந்திரக்கட்சி வடபிரதேச அமைப்பாளர் கூறுகிறர்

புத்தூர், திங்கள்

அரசாங்கத்தில்உத்தியோகம் பெற்றுத்தருவதாகக் கூறி லஞ்சம் வாங்கியதாகக் கைதுசெய்யப்பட்டவர் கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அலுவலக முழுநேர ஊழியரல்ல என்றும் அவர் ஒரு தொழிற்சங்கத்துடன் சம்பந்தப்பட்டவர் என்றும் வடபிரதேச ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. எம். துரைராசா தெரிவித்தார்.

திரு துரைராசா எமது பிரதிநிதியிடம் மேலும் கூறியதாவது:

லஞ்ச ஊழல்கள் நடப்பது பற்றி அறிந்து நான் ஒரு நிரந்தரக் காரியதரிசியுடன் தொடர்பு கொண்டு, ஊழலில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டு பிடிக்க மூனைந்ததைத் தொடர்ந்து பிரஸ்தாப லஞ்சஊழல் சம்பவம் கண்டு பிடிக்கப்பட்டது.

லஞ்ச ஊழலில் ஈடுபடும் எவரையும் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும்சரி, மக்கள் அரசாங்கம் தண்டிக்க சற்றேனும் தயங்கமாட்டாது

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்களோ அல்லது எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்களோ, அரசாங்க ஊழியர்களோ லஞ்ச ஊழலில் ஈடுபட்டால் உடனடியாக எமக்குத் தெரிவியுங்கள். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு மேற்கொள்ளுவேன்

## பிரதமர்

கோட்டை, திங்கள்

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சுகவீனமுற்றிருக்கிறர் இதன் காரணமாக இரண்டொரு தினங்களுக்கான தமது சகல அலுவல்களையும் பிரதமர் ரத்து செய்துள்ளார்.

# "பாரதிக்கு மாதந்தோறும் விழா எடுத்தாலும் தகும்"

## திருநெல்வேலி இசை விழாவில் யாழ். உதவி மேயர்

யாழ்ப்பாணம், செவ்.

'மனிதனை மனிதனக மதிக்கவேண்டுமென்றவர் பாரதியார். தனி ஒருவனுக்கு உணவில்லையென்றல் ஜெகத்தினை அழித்திடுவோமென்று குரல் கொடுத்தவர் அவர். ஏழை மக்களின் வாழ்வுமலரவேண்டுமென்று பாடியவர்; பீஜித் தீவின் கரும்புத் தோட்டங்களில் அடக்கிஒடுக்கப்பட்ட தமிழ் தொழிலாளர்க்கு வாழ்வு கிடைக்க வேண்டுமென்று அறைகூவல் விடுத்தவர் பாரதி. அப்படிப்பட்ட தமிழ்க் கவிஞனுக்கு ஆண்டு விழாக் கொண்டாடுவதோடு திருப்தியடையாது மாதந்தோறும் விழாவெடுத்தாலும் அவன் பெருமைக்கு அது மிகையாகாது'' என திருநெல்வேலி சைவமுன்னேற்றக்கழக இரண்டாம் ஆண்டு இசைவிழாவின் ஐந்தாம் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் மாநகர துணை முதல்வர் திரு ஆ. துரைராஜசிங்கம் குறிப்பிட்டார்.

பரமேஸ்வராச்சந்தி விநாயகராலய முன்றலில் பாரதி அரங்கில் நடைபெற்ற மேற்படி விழாவில் தொடர்ந்து பேசுகையில் துணை முதல்வர் கூறியதாவது:

'நவராத்திரியைப் பற்றியும் சக்தி வழிபாட்டைக் குறித்தும் பாடிய பாரதி, தேசத்தில் மலிந்துகிடந்த நச்சுத்தன்மைகளைச் சாடவும் பின்னிற்கவில்லை. பிறப்பால் பார்ப்பனராகவிருந்தபோதும் பாரதியார் சாதிவெறியைச்சாடவும் அதற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தவும் தவறினரில்லை. பெண்கள் சுதந்திரத்திற்கும், ஆண் பெண் சமத்துவத்திற்கும் அடிகோலியது அவரது பாடல்களே, நாட்டின் அடிமை நிலையைக் கண்டு கொதித்தெழுந்த பாரதியாரை விடுதலை வீரர் வரிசையில் வைத்துப் போற்றிவருகிறேம் தமிழை மறந்தும், மறுதலித்தும் ஆங்கில மோகத்தால் உந்தப்பட்ட தமிழர்கள். தமக்குத் தமிழ்பேச வராது என்று பகிரங்கக் கூட்டங்களில் தமிழர்கள் மத்தியில் கூறுவதைத் தமக்குப் பெருமையாகக் கருதி வந்த நாட்களிலேயே யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணேம்' என்று தமிழ் உணர்வுப் பாடல்களைப் பாடி பாரதி தமிழ்மக்களிடம் தமிழ் உணர்வைத் தட்டிஎழுப்பினர்.''

## மரணதண்டனை

கோட்டை, திங்கள்

டாக்டர் பந்துலுபெரேரா கொலைவழக்கில் முதலாம் எதிரியான எஸ். முத்தையாவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# குழந்தைவயிற்றினுள் குழந்தை!

கோட்டை, திங்கள்

ஒருவருடம் 8 மாத குழந்தையினது வயிற்றுக்குள் 6 கைகளும் 4 கால்களையுடைய வளர்ச்சியடைந்த கருவொன்று இருந்து எடுக்கப்பட்டது'

இந்த அதிசயமான குழந்தை பாணந்துறையைச் சேர்ந்த எச் பிரியாந்தி பெரேரா என்ற குழந்தையினது வயிற்றுக்குள் இருந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சைமூலம் நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்டது இந்த அதிசய சம்பவம் வைத்தியத் துறையினர் யாவரையும் அதிசயத்துள் ஆழ்த்தியுள்ளது. மேற்படி சத்தரசிகிச்சையை நடாத்திய டாக்டர்கள் இவ்வதிசய வளர்ச்சியடைந்த கருவில் அங்கங்கள்யாவும் வளர்ச்சியடைந்துள்ளன வெனவும் அவை வேறுபாடுள்ளனவாகக் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். தலையில் அடர்த்தியான ரோமம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

குழந்தை பிரியாந்தி சிறுநீரகக் கோளாறல் அவதியுறுவதாகக்கூறி கொழும்பு 'லேடிறிட்ஜ்வே' வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். பரிசோதனையின்போது அவளது நோய்கண்டுபிடிக்கப்படாதிருக்கவே மிக நுணுக்கமாக 'எக்ஸ்ரே' எடுத்த வைத்தியர்கள் வயிற்றினுள் வளர்ச்சியடைந்த கருவொன்று இருக்கக்கண்டு பிடித்தனர். இதனல் அக்குழந்தையின் உயிருக்கு ஆபத்தென்பதை உணர்ந்து உடனடியாக சத்திரகிகிச்சை செய்து இந்த அதிசயக்குழந்தையை வெளியேற்றினர். குழந்தை பிரியாந்திக்கு ஒருவித ஆபத்துமில்லையெனவும் அவள் நலமடைவதாகவும் வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

## எதிர்காலம் வளம்பெறுவதற்கு

# "சிறுவயதிலேயே தொழில் ஒன்றைப் பழகிக்கொள்ளுங்கள்"

## மத்தியகல்லூரி விழாவில் மாணவர்க்கு அறிவுரை

யாழ்ப்பாணம், செவ்வாய்

**பட்டதாரிகள் பலர் இன்று வேலையின்றிக் கஷ்டப்படுகிறர்கள் ஆனல் வர்த்தக கல்வி படித்தவர்கள் யாவரும் நல்ல வேலைகளில் அமர்ந்து தமக்கும் பிறர்க்கும் உதவியாக இருக்கிறர்கள். ஆகவே மாணவர்கள் சிறு வயதிலேயே ஏதாவது ஒரு தொழில்கற்றுக் கொள்ள முற்படுவது அவர்களுக்கே நன்மையாக இருக்கும்,**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வர்த்தகக் கல்விப் பொன் விழாவின் போது கலைப்புலவர் நவரத்தினத்தின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்துப்பேசிய வாழைச்சேனை கடதாசிகூட்டுத்தாபன அதிபர் திரு. கே.சி. தங்கராசா மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். மத்திய கல்லூரிமண்டபத்தில் நடந்த இவ் விழாவில் திரு கே. சி. தங்கராசா மேலும்கூறியதாவது:- இன்றுள்ள கல்விமுறை பொதுவாக வேலையில்லாக் கஷ்டத்தை அதிகரிப்பதாகவே உள்ளது இதை அரசாங்கம் மட்டும் தீர்க்கமுடியாது. பெற்றேர்கள் தங்களது பிள்ளைகளுக்கு ஏதாவது தொழிலை தீர்மானித்து அதற்கான முறையில்பயிற்சியை சிறு வயதிலிருந்தே அளிப்பது தங்களுக்கு தாங்களே உதவி செய்து கொள்வதாகும். தொழிலை அடிப்படையாகக் கொண்டு கல்விமுறையையும் திருத்தியமைக்க வேண்டியது அவசியமாகும்.

அரசியல் வாதிகள் என்ன தான் சொன்ன போதிலும் இந்த அழகான நமது நாட்டில் வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம் அனைவரும் இலங்கையர் என் ஒரே உணர்வுடன் பேசும் காலம் வெகுதூரத்தில் இல்லை, ஆனல் அவர்கள் தமது தாய் மொழியான சிங்களம் அல்லது தமிழில் தம் கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடும் என்றுர்.

திரு. தங்கராசா மேலும் பேசும்போது குறிப்பிட்டதாவது:-

யாழ். மத்திய கல்லூரி யாழ்ப்பாணத்திற்கு மட்டுமன்றி இலங்கை அனைத்துக்குமே கல்வித்துறையில் பல தொண்டுகள் செய்துள்ளது. இன்னும் செய்து வருகின்றது. இக் கல்லூரியின் புகழ் இந்நாட்டில் மட்டுமல்லாது வெளியேயும் பரவியுள்ளது. இதற்குக் காரணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் கலைப்புலவர் நவரத்தினம் போன்ற பெரியார்கள் இந்த ஸ்தாபனத்திலிருந்து அவர்களது மேலான பணிகளை பல்லாண்டு காலம் பெறமுடிந்ததுதான். அப்பெருமக்களையும், அவர்களது தொண்டுகளையும் என்றும் நாம் மறக்கமுடியாது. கலைப்புலவரின் படத்தை திரைநீக்கம் செய்து வைத்தது போலவே, இந்த கல்விஸ்தாபனத்திலே நடமாடி இதைப் புனிதப்படுத்திய ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானின் படத்தையும் திறந்து வைப்பது மிகப் பொருத்தமானதாகும்,

கலைப்புலவர் நவரத்தினம் கலா நிலையம் அமைத்தவர். சமயம், தத்துவம், கலைகள் முதலிய பல நூல்களை வெளியிட வேண்டுமென்று ஆர்வம் கொண்டவர். அதற்காகவே கலாநிலையப் பதிப்பகத்தையும் அவர் ஆரம்பிக்கச் சொன்னர். அந்தப் பெயரிலேயே ஆரம்பித்த ஸ்தாபனம்தான், 'ஈழநாடு' பத்திரிகையை ஆரம்பித்தது. அப்பத்திரிகையை ஆரம்பிக்க அவரே ஊக்கமும் உற்சாகமும் அளித்தார். மேலும் யாழ்ப்பாணத்திற்கு பல பெரியார்களையும், அழைத்து வரவேற்று உபசரித்தனர்.

வர்த்தகதுறை பிரதம கல்வி அதிகாரி திரு. சி. ஏ. எம். கெக்குலாவல கூறியதாவது: '50 வருடத்திற்கு முன்னர் வர்த்தக கல்வி பிரபலமடைந்திருக்காததோடு உயர் கல்வியை விரும்புவோர் அதனை தேர்ந்தெடுக்கவில்லை. அப்படியிருந்த போதிலும், அந்தக் காலத்தில் உதவி பெற்ற பாடசாலைகளில் ஒன்றுன யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தமிழ் பகுதிகளில் வர்த்தக கல்வி போதிப்பதில்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

பற்ரெறி சாச்சர் சாச் செய்வதற்கும் திருத்துவதற்கும் கடைக்குத் தேவையான முழு ஆயுதங்களும் விற்பனைக்குண்டு. டைன மோட்டா வேக்ஸ், நம். 13, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். 2987

கோழிக்குஞ்சு:

ஐந்து வார நல்ல சாதி கோழிக்குஞ்சுகள் மூன்னூறு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: மகாதேவா, 112, கண்டிவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7211. 2308

வீடு கட்ட, யந்திரசாலைகள் அமைக்க சிறந்த காணி 24 பரப்பு சுமார் 150 தென்னை மரங்களும் ஓர் நல்ல தண்ணீர் கிணறும் அடங்கியதாய் யாழ். மாநகரசபை எல்லையுள் நாயன்மார்கட்டில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. வீ. தயாபரன், 10, குமாரவீதி, நல்லூர். 2996

யாழ்ப்பாணம் அரியாலையில் மத்திய வகுப்பினர் வீட்டுத் திட்டம். இரண்டு அல்லது கூடிய பரப்புடைய இருபது காணித் துண்டுகள் யாழ்ப்பாணம்-கண்டி ரோட்டுக்கு அண்மையில். பெரிய கடையிலிருந்து பஸ் கூலி பத்துச் சதம் மாத்திரம். நல்ல தண்ணீர், பாடசாலைகள், கோவில், தேவாலயம், சந்தை அண்மையில். மின்சார, தண்ணீர் விநியோகத் திட்டங்கள். பதிவு செய்க. லான்ட் இன்வெஸ்ட்மென்ட், 6, பெரியதெரு, யாழ்ப்பாணம். 2309

### வகுப்பு

சாயமூட்டுதல் (Tye and Dye) செயல்முறை வகுப்புகள் 13 ம், 14-ம் திகதிகளில் மாலை 2 மணி முதல் 5 மணி வரை நடைபெறும். ஒரு வகுப்பிற்கு கட்டணம் ரூபா 5/- V. சுப்பையா, 109, பருத்தித்துறை வீதி, அரசடி, நல்லூர். 2307


## விக்ரோறியா வெற்றி

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மூன்றும் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி கோஷ்டியினர் வெற்றியீட்டினர்.

ஆயுர் வேத

## இடைக்கால பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

வடஇலங்கை சுதேசவைத்திய சபையால் யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேத கல்லூரியில் சென்ற மாதம் நடந்த இடைக்கால பரீட்சையில் கீழ்க்காணும் மாணவர்கள். சித்தியடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

### மூன்றும் வருடம்

1-ம்பிரிவு: எஸ். ஜே பெர்ஞண்டோபுள்ளே, 2ம் பிரிவு கே எல், குறூஸ் றவ்வியல், சாதாரணம்: பி. ரி இராஜ கம்பீரம்

### இரண்டாம் வருடம்

ஆர். பாக்கியநாதன்.

### முதலாம் வருடம்

2-ம் பிரிவு' ஆர். தெய்வநாயகி, சாதாரணம்: எஸ் அமிர்தபூபதி, எஸ். நிமலாவதி, என். இராஜகுமாரன்.

## கொக்குவில் இந்து வெற்றி

உடுவில், திங்கள்

யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்க ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியின்கீழ் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலய மூன்றும் பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் இந்துக் கோஷ்டி 2-1 கோல்களால் வெற்றியீட்டியது

கொக்குவில் இந்துக கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு மகேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார்.

## நல்லூர் கடையில் திருட்டு

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடையிலிருந்து திருட்டுப் போன பொருட்கள் அங்குள்ளமலசலகூடமொன்றில் கண்டுபிடிக்கப்பட்டன.

51 கற்பூரப் பெட்டிகள், ஒவல்ரின், ஹோர்லிக்ஸ், 31 பார் சவுக்காரம், 25 பார் சின்ன சவுக்காரம் ஆகியவை அங்கு காணப்பட்டன, சந்தேகநபர் எவரும் கைது செய்யப்படவில்லை.

சப்இன்ஸ்பெக்டர் ஜெயசூரியா, கான்ஸ்டபிள் சகாப்தீன் ஆகியோர் இதுபற்றி விசாரணை செய்துவருகின்றனர்.

# "தனிஇனமல்ல; தனிச் சமூகக்கோரிக்கையே"

## எம். ஸி. சுப்பிரமணியம் விளக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

''தமிழர் இனத்திற்குள், சிறுபான்மைத் தமிழர்களை ஒரு சமூகமாகக் கருதி அவர்கள் முன்னேறும்வரை சலுகைகள் அளிக்கவேண்டும்''

நியமன எம் பி. திரு. எம். ஸி சுப்பிரமணியம் நேற்று நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது: ''அரசியல் நிர்ணய சபைக்கு நான் சமர்ப்பித்த மகஜரில் சிறுபான்மைத்தமிழரைத் தனி இனமாகப் பிரகடனம்செய்யும்படி கோரவில்லை சிறுபான்மைத் தமிழரைத் தனிச் சமூகமாகக் கருதும்படியே கோரினேன். இதனைச் சிலர் தவறுகப் புரிந்திருக்கிறார்கள்.

இன்றுள்ளதுபோல் பின்தங்கிய சமூகமாக இருந்தால்தான், சிறுபான்மைத் தமிழர்களுக்குச் சலுகைகள் கிடைக்கும். தமிழர் என்று பொதுவாக இருந்தால் அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் பொதுவாக எல்லாத் தமிழர்களுக்கும் கிடைத்துவிடும் ஆதலால் நாம் தனிச் சமூகமாகவே இருக்கவேண்டும்.''

...

## இன்றைய பலன்

புரட்டாதிமாதம்20-ம்திகதி (6-10-70)

மேஷம்- அதிகாரக் குறைவுக்கு இடமுண்டு. அபாயகரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

ரிஷிபம்- கலைஞர்களுக்குப் புதிய சிந்தனைகள் உருவாகும். குடும்பத்தில் உறவு முறைகள் மிகவும் சுமுகமாக இருக்கும் சுப தினம்.

மிதுனம்- நண்பர்களின் தொல்லை எரிச்சலைத்தரலாம். சிலருக்கு உடல் நலம் பாதிக்கப்படும் துயர்படிந்த தினம்.

கடகம்-நேர்முகப்பரீட்சை வெற்றியைத்தேடித்தரலாம் இரக்கசிந்தை மேலிடும் யாத்திரைப் பிரியமும் ஏற்படும்.

சிம்மம்- இதமான வாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்செய்தொழிலால் சிறப்புண்டு

கன்னி- வணிகத்துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும் பொது மக்களின் ஆதரவு கிடைக்கும்.

துலாம்-பலவித சிந்தனைகளால் தாக்கப்படுவீர்கள் உடல் நலனும் சிறிது பாதிக்கப்படலாம்,

விருட்சிகம்- கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம்.

தனுசு- கனிவான நினைவுகள் தலைதூக்கும் காதல் விவகாரங்களுக்கும் இடம் உண்டு. தனச்சிறப்புக்கும் இடமேற்படும்,

மகரம்- சிநேகிதர் வழியால் கவலைகள் தோன்றக் கூடும். விவசாயிகளாயின் ஏமாற்றத்திற்கு இடமுண்டு மனத்திடம் வேண்டும்

கும்பம்- தெளிவனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும் வணிகர்களுக்கு வியாபா[illegible] விருத்தியுண்டு அறி[illegible]

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 6—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு6-15இசைப்பயிற்சி, 6-30 மகளிர் அரங்கம், 7-00 வாத்தியஇசை, 7-15 வயலின், 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30செய்தித்தொகுப்பு.


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்

இன்று 6-30, 9-30

பேபுபா, பீபேயா 2-30


## வித்தியாதிபதிக்கு மகஜர் சமர்ப்பித்தனர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அகில இலங்கை பயிற்றப்பட்ட அரசினர் தமிழ் ஆசிரியர் தூது கோஷ்டியினர் பொதுச் செயலாளர் திரு எஸ். செல்லத்துரை தலைமையில் வடமாநில கல்வி வித்தியாதிபதியைச் சந்தித்துத் தங்கள் குறைகளை எடுத்துக் கூறினர். பின்வரும் தீர்மானங்களைகொண்ட மகஜர் ஒன்றை வித்தியாதிபதியிடம் சமர்ப்பித்தனர்.

தலையீடுகளினுல் 1-10-70 தொடக்கம் மாற்றப்பட்ட சங்க உறுப்பினர்களின் மாற்றம் நிறுத்தப்பட்டு அவர் விரும்பிய பாடசாலைக்கு திரும்பவும் மாற்றம் செய்யப்படவேண்டும் என்றும், அரசாங்க பொதுப் பரீட்சைகளுக்கு மேற்பார்வையாளர் பதவி, நிரந்தர நோக்குநர் பதவிகளுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களையும் நியமிக்கவேண்டும் என்றும் மகஜரில் கோரப்பட்டுள்ளது. இத்தூது கோஷ்டியில் தாய்ச்சங்கத் தலைவர்: ந சுப்பிரமணியம், வடபிரதேச கிளைச்சங்கத் தலைவர்: கே. செல்லையா, செயலாளர்: ஆ சபாரத்தினம், பொருளாளர்: கெ தில்லையம்பலம் ஆகியோர் இடம் பெற்றனர்.

(வல். நி)

......

## சமாதிக் கட்டிடம்

அம்பன், திங்கள்

புலோலி கிழக்கில் சமாதி நிலை எய்திய நம[illegible]ய சுவாமியின் சமாதியை ஓ நிரந்தரக் கட்டிடமாக்கும் பணியில் புலோலி கிழக்கு மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

......

யாழ். பாடசாலை உதைபந்தாட்டம்

## வைத்தீஸ்வரா கோஷ்டி ஒரு கோலால் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாண பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த வியாழக்கிழமை, யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்கும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், வைத்தீஸ்வரா வெற்றி பெற்றது'

மேற்படி இரு கோஷ்டிகளுக்குமிடையில் போட்டி மிகவும் கடுமையாக நடைபெற்றது. இடைவேளைவரை இரு கோஷ்டிகளும் கோல்கள் எதுவும் போடவில்லை.

ஆட்டம் முடிவடைவதற்கு சில மிடங்கள் இருக்கும்போது, வைத்தீஸ்வராக் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் மிகசாமார்த்தியமாக விளையாடி 1—0 கோலைப் போட்டு அமெரிக்கன் மிஷன் கல்லூரியைத் தோற்கடித்தனர்.

இப் போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இவ்விரு கோஷ்டிகளுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், உடுப்பிட்டி வெற்றி என நேற்று முன்தினம் வெளியான செய்தி தவறு.

(தே. நி)

## தீவுப்பகுதி விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வேலணை, திங்கள்

தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சங்கம் வேலணையில் நடத்தியமெய்வல்லுனர் போட்டி முடிவுகள் வருமாறு -

பரிதிவட்டம் எறிதல் ஏ. எவ். செபமாலைமுத்து சென் ஜேம்ஸ் சனசமூகநிலையம், ஊர்காவற்றுறை எஸ் சந்தியாப்பிள்ளை, சென்ஜேம்ஸ், ப குணபாலன். பருத்தியடைப்பு குமரன் ச, ச. நி.

உயரம்பாய்தல் மு மகாலிங்கம் குமரன் ச ச நி, இ இராசன் விநாயகர் விளையாட்டுக்கழகம் நயினுதீவு எஸ் ஜோர்ஜ் சென்ஜேம்ஸ்.

800 மீற்றர் ஓட்டம் எம் ஆசீர்வாதம் புளியங்கூடல் மகாமாரிசன சமூகநிலையம், எம் நட்சத்திரம் சென்ஜேம்ஸ் ரி சிவஜோதி நல்லிணக்கச்சபை வாரிவளவு,

400 மீற்றர் ஓட்டம் எம் இலட்சுமணன் வாரிவளவு நல்லிணக்கசபை. எஸ் உலகநாதன் மகாமாரி ச ச நி. ஆர் சண்முகரெத்தினம் மாமாரி ச ச நி.

100 மீற்றர் ஓட்டம் இ விக்கினேஸ்வரன் வாரி ந பி சபை த அருமைநாயகம் குமரன் ச ச நி, நா பாலு சட்டிபுலம் சனசமூக நிலையம் வேலணை.

குண்டெறிதல் எவ் செபமாலைமுத்து சென்ஜேம்ஸ், எஸ் சந்தியாப்பிள்ளை சென் ஜேம்ஸ், எஸ் நல்லதம்பி விநாயகர் வி க.

200 மீற்றர் ஓட்டம் பி விக்கினேஸ்வரன் வாரிவளவு ந இ சபை, த அருமைநாயகம் குமரன் ச ச நி, இ கிருஸ்ணன் விநாயகர் வி க.

நீளம்பாய்தல் இ இராசன் விநாயகர் வி க, எ ஆசீர்வாதம் மகாமாரி ச ச நி, எஸ் தேவதாசன் சென் ஜேம்ஸ்.

1500 மீற்றர் ஓட்டம் சி ஜோதிராசா மகாமாரி, கே சோமசுந்தரம் ந இ சபை. எம் ஆசீர்வாதம் மகாமாரி.

கயிறுழுத்தல் செட்டிபுலம் ச ச நி, மகாமாரி ச ச நி வாரிவளவு ந இ சபை,

தத்தி மிதித்துப் பாய்தல் இ இராசன் விநாயகர் வி க, எஸ் தியாகராசா வாரிவளவு ந இ சபை, என் மகாலிங்கம் குமரன் ச ச நி.

4X100 மீற்றர் ஓட்டம் மகாமாரி ச ச நி, குமரன் ச ச நி, சென்ஜேம்ஸ் ச ச நி

சிறந்தவீரர் இ. இராசன் நயினுதீவு. மகாமாரி ச ச நிலையம் முதலாமிடத்தையும் வாரிவளவு ந இ சபை இரண்டாமிடத்தையும் சென்ஜேம்ஸ் ச ச நி மூன்றுமிடத்தையும் பெற்றன.

உதைபந்தாட்டம் ஏ பிரிவு முதலிடம் றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் பி பிரிவு சிவலைப்பிட்டி ச ச நி தாச்சிப்போட்டியில் முதலிடம் செட்டிபுலம் ச ச நி,

போட்டிஇறுதியில் வட்டுக்கோட்டை எம் பி திரு ஆ தியாகராசா வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை வழங்கினுர்.

திரு ப பரம்சோதி, திரு பி பொன்னுச்சாமி, திரு எம் விஜயரெத்தினம் மற்றும்பலர் போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்தனர்.

## அமைச்சு நடவடிக்கை

வேலணை, திங்கள்

வேலணைப் பகுதியில் குழாய்மூலம் குடிநீர் விநியோகம் நடைபெறுவதன் அவசியம் பற்றியும் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் உள்ளூராட்சி அமைச்சருடன் திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. தொடர்புகொண்டதையடுத்து விபரம் சேகரிக்கும்படி யாழ் உள்ளூராட்சி ஆணையாளர் கோரப்பட்டுள்ளார்.

......

## ஓய்வுபெறும் உப தபால் அதிபர்கள்

பருத்தித்துறை, திங்கள்

ஆனைக்கோட்டை உப-தபால் நிலைய அதிபரும் நீர்வேலி உப-தபால் நிலைய அதிபரும் இவ்வாண்டு இறுதியுடன் ஓய்வுபெறுகின்றனர். இவ்விருவரும் அறுபது வயதை இவ்வாண்டுடன் பூர்த்திசெய்கின்றனர்.

— —

## மக்கள் அதிருப்தி

கோப்பாய், திங்கள்

கடந்த சில மாதங்களாக இக்கிராமத்தின் மின் விளக்குகள் இரவு 10 மணிக்குப் பின்னரே வெளிச்சத்தைக் கொடுக்கின்றன. இதனுல் மின் பாவனையாளர்கள் மிகுந்த கவலையடைந்துள்ளனர் இது குறித்து அதிருப்தி தெரிவிக்கும் மகஜரொன்று இப்பகுதிப் பாவனையாளர்களால் கோப்பாய் கி ச தலைவருக்கும் அங்கத்தவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ......

## விபரங்கள் சேகரிப்பு

உடுப்பிட்டி, திங்கள்

கல்வியமைச்சின் உத்தரவைத் தொடர்ந்து உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். மகேஸ்வர ஐயர் உடுப்பிட்டி வட்டாரத்திலும், நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளிலும் உள்ள தனியார் கல்வி நிலையங்கள், டியூட்டரிகளுக்கும் சென்று அவை சம்பந்தமான பூரண விபரங்கள் திரட்டி வருகின்றார்.

......

## யாருடையது?

யாழ்ப்பாணம். செவ்வாய்

திறப்புக்கோர்வை ஒன்று கே. கே. எஸ். வீதியில் திரு. வி, எஸ். நடராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

டிக்குமிடையே நடைபெற்ற
உதைபந்தாட்ட சுற்றுப்
போட்டியில் சுழிபுரம் விக்
ரோறியாக்கல்லூரி கோஷ்டி
யினர் வெற்றியீட்டினர்.

சூரியா, கான்ஸ்டபிள் சகாப்
தீன் ஆகியோர் இதுபற்றி
விசாரணை செய்துவருகின்ற
னர்.

10-30செய்தித்தொகுப்பு.


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
கண்ணன் - ராதிகா தேங்காய் சீனிவாசன் நடித்த
ஒரு விரல் (ஒரு மர்ம சித்திரம்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — பத்மினி — நாகேஷ் ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ நடித்த
எதிர்காலம்

கெப்பிட்டல் (கொழும்பு)
வெலிங்டன் யாழ்நகர்
(2-30, 6-30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்
துலாபாரம்
(தமிழ்)
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம்.ஜி.ஆர் — சரோஜாதேவி நடித்த
பெரிய இடத்துப்பெண்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
என்.ரி. ராமராவ்-ஜெயலலிதா நடித்த
விடாக் கொடாக் கண்டன்

MANOHARA
Jaffna
Daily 4 Shows
10-30, 4-15, 7 & 9-45 p m
IT'S A MAD, MAD, MAD, MAD WORLD
(Scope-color)

REGAL
Jaffna
Daily: 4-45, 7 & 9-45 p m
Poya days 4 Shows
THE SWORD IN THE STONE


ஏமாற்றத்திற்கு இடமுண்டு மனத்திடம் வேண்டும்.

கும்பம்- கொள்வனவுக ளில் நல்ல திருப்பம் ஏற்ப டும் வணிகர்களுக்கு வியா பார விருத்தியுண்டு. அறி ஞர்கள் ஆதரவு தாராளமா கக் கிடைக்கும்.

மீனம்- கலை உலகம் சம் பந்தப்பட்டவர்களுக்குப் புகழ் பரவும் சிலர் புதிய வாகனத்தை கொள்முதல் செய்வதில் கவனம் செலுத் துவர்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

நிலை எய்திய நமசிவாய சுவாமியின் சமாதியை ஒ நிரந்தரக் கட்டிடமாக்கும் பணியில் புலோலி கிழக்கு மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

......

## விறகு இல்லை

சங்கானை, திங்கள்

மரக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கிவரும் சங்கானை விறகுசாலையில் கடந்த சில நாட்களாக விற்பனைக்கு விற கில்லாததினால் பல மைல்க ளுக்கப்பால் இருந்து விறகு வாங்க வரும் பொதுமக்கள் பெரும் ஏமாற்றத்துடன் வீடுதிரும்புகின்றனர்.


மரண அறிவித்தல்
கிளவ் பாலசிங்கம்
தங்கமலர் அவர்களது அருமைக் கணவரும், காலம்சென்ற திரு, திருமதி A. E. கிளவ் அவர்களின் மூத்தமகனும், திரு. ஜெயசிங்கம், (இஞ்சினியர் C T. B. யாழ்ப்பாணம்), திரு. இராசசிங்கம் (U. K.), இந்திராணி, சந்திராணி, விமலராணி, அவர்களின் தந்தையும், முத்துராசா (கெமிக்கல் இஞ்சினியர், (R. R. I மலேசியா), Dr. நாகநாதன் (செபில்ட் U. K.), சீத்தா ஆகியோரின் மாமனாரும் டத்தோ சேர் கிளவ் துரைசிங்கம், திருமதி J. P. மாணிக்கசிங்கம், திருமதி ஜி. ஜி பொன்னம்பலம், திருமதி R. T. பத்மநாதன் ஆகியோரின் சகோதரருமான திரு கிளவ் பாலசிங்கம் காலமாகிவிட்டார். ஈமக்கிரியைகள் இன்றுமாலை 4 மணிக்கு நடைபெறும். 14, கொன்வென்ற் வீதி, யாழ்ப்பாணம்.
2494

யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்





எஸ் சந்தியாப்பிள்ளை சென் ஜேம்ஸ், எஸ் நல்லதம்பி விநாயகர் வி க.

200 மீற்றர் ஓட்டம் பி விக்கினேஸ்வரன் வாரிவளவு ந இ சபை, த அருமை நாயகம் குமரன் ச ச நி.

டியவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

திரு ப பரம்சோதி, திரு பி பொன்னுச்சாமி, திரு எம் விஜயரெத்தினம் மற் றும்பலர் போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்தனர்.

## "நாவலர்பணியை இளைஞர் பின்பற்ற வேண்டும்"

தாவடி, திங்கள்

''தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடைய பணியை உள்ளத்தில் கொண்டு, அவருடைய வழியில் இளைஞர்கள் செல்லுதல் வேண்டும். அதுவே அவருக்குச் செய்யும் கைமாறாகும். நாவலருடைய முயற்சிகள் இளைஞர்களுக்குப் பெரிதும் உகந்தன உயர்வைக் கொடுக்கவல்லன. நாவலர் அரங்கிலே இன்றைய இசைநிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்படுவது இக்கழகத்தினரின் சீரிய பண்பை வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது''

மேற்கண்டவாறு திருநெல்வேலி சைவமுன்னேற்றக் கழக 2-வது ஆண்டு இசை விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய வழக்கறிஞர் திரு. எஸ் கனகரத்தினம் கூறினர்.

பரமேஸ்வராச் சந்திவிநாயகராலய முன்றலில் நடைபெற்றுவரும் இவ்விழாவில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது.

அந்நியராதிக்கத்தில் அறிவொளிபோல் தோன்றியவர் ஆறுமுகநாவலர். எம்மை நல்வழிப்படுத்த அவதரித்த மகான்

தனக்கெனவாழாதுபிறர்க்கெனவாழ்ந்து, உயர்ந்த குறிக்கோளுடன் ஒழுக்க நெறியின் கண் நின்று வாழ்ந்து காட்டிய பெரியார் நாவலர். சைவ முன்னேற்றக் கழகம் அவர் பணிவழியொழுகித் தொண்டாற்றுமென நம்புவோம்'

நந்தி இசைமன்ற மாணவர்களின் மிருதங்க இசை செல்வன் எஸ். நவரத்தினத்தின் இன்னிசை என்பன விழாவில் இடம் பெற்றன.

......

வேலணை திங்கள்

வேலணை ஆத்திசூடி வித்தியாசாலை தலைமை ஆசிரியர் திரு ஐ. பொன்னையா இளைப்பாறியதையடுத்து திரு ச. குமரேசையா தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திறப்புக்கோர்வை ஒன்று கே. கே. எஸ். வீதியில் திரு. வி. எஸ். நடராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

......

## இடமாற்றம்

முசலி, திங்கள்

மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. தேவரெத்தினம் டான் போத் கல்முனைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார். இவரது இடத்துக்கு வவனியா மாவட்ட உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் திரு. கே. நல்லைநாதன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்


கைத்தறி நெசவாளர்களுக்கு
ஓர் அறிவித்தல்
உங்களிடம் உற்பத்தியாகும் எந்தவிதமான கைத்தறி ஜவுளிகளையும் பெறுமதியான விலைகளுக்கு எம்மிடம் விற்பனை செய்யலாம்,
S. R S.
ஜவுளி மாளிகை
எஸ் ஆர். செல்லத்துரை,
216, கே கே எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296

1-11-1970 'விடுதலை' இதழில் ஆரம்பம்
அடிமைத் தளையில் வாடும் ஈழத் தமிழ் இனத்துக்கு வழிகாட்டி, சமயசஞ்சீவி போன்று தொடர்கதையாக வெளிவருகிறது:
"நமக்கொரு நாடு"
லெ யான் யூறிஸ் எழுதிய மகாகாவியம். இருபதாம் நூற்றுண்டின் மாபெரும் சாதனை. இஸ்ரவேல் யூத அரசு அமைத்த வீர வரலாறு ரஷ்ய ஸார் மன்னராட்சியின் கொடுங்கோன்மை, ஹிற்லர் ஆட்சியின் பிணவெறி, பிரிட்டிஷாரின் சுயநல ஏகாதிபத்திய சாணக்கியம். இவற்றில் இருந்து தப்பியோடிய யூதமக்களின் விடுதலைவெறி, வீராவேசம், இலட்சியம், தியாகம், காதல், இறுதி வெற்றி. சிந்தனைக்கும் செயலுக்கும் தூண்டுகோல். 75 சதவிகிதம் உண்மை வரலாறு விரவிய காப்பியக் கதை.
முடிவு: இஸ்ரவேல் பிரகடனம் 14—5—1948
தமிழ் ஆக்கம் "அஸ்வினி"
அதிக பக்கங்களுடன் வெளிவருகின்றது! உங்கள் பிரதிக்கு முந்துங்கள்! மொத்த விற்பனையாளர்கள் முன்கூட்டிப்பணம் அனுப்பி தங்கள் பிரதிகளுக்குப் பதிவுசெய்ய வேண்டும். 20 வீதம் கழிவு தரப்படும். வருடச்சந்தா ரூ 4-00 இரு வருடங்களுக்கு ரூ. 7-50; தனிப்பிரதி: சதம் -/10.
தொடர்பு கொள்ளவும்;
நிர்வாகி 'விடுதலை'
10, பென்றிவ் தோட்டம்,
கொழும்பு-3
2495


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலிருந்து செல்லும் இந்திய வம்சாவழியினர்
# அந்தமானில் 60 ஆயிரம்பேர் குடியேற்றப்படுவர்!

திருச்சி, அக். 5

இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து செல்லும் அறுபதினுயிரம் இந்திய வம்சாவழியினர் அந்தமானில் குடியேற்றப்படவுள்ளனர்,

இந்தத் தகவலை நேற்று தமிழ்நாடு விவசாய மந்திரி திருமதி சத்தியவாணி முத்து வெளியிட்டார்

திருச்சியில் நடந்த மகாநாடொன்றில் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து இத்தகவலைத் தெரிவித்தார்,

ஸ்ரீமா — சாஸ்திரி ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து திரும்பும் இந்திய வம்சாவளியினருக்கு குடியிருப்பதற்கு இடவசதிகள் செய்துகொடுப்பது குறித்து திருமதி சத்தியவாணிமுத்து திருச்சியில் மகாநாடு ஒன்றைக் கூட்டினுர், அம்மகாநாட்டில் இது சம்பந்தமாக பல தகவல்களை அவர் தெரிவித்தார்.

## மூன்று கோடி

மத்திய அரசு அந்தமானில் குடியேற்றப்படவிருக்கும் 60 ஆயிரம் பேருக்கும் இடவசதியும் தொழில் வசதியும் செய்துகொடுக்க மூன்றுகோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சர் கூறினுர்.

அந்தமானில் அறுபதினுயிரம் பேரையும் குடியேற்றுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாகக் கவனிக்கப்படுவதாகவும் அவர் கூறினுர்.

## தொடர்ந்து ஆதரவு

திருவனந்தபுரம், அக். 5

தலைமைப்பீடத்தின் முடிவுக்கு மாருக, புரட்சி சோஷலிஸ்ட் கட்சியின் கேரளப் பிரிவு, கேரளத்தில் பதவி ஏற்றுள்ள புதிய அரசுக்குத் தொடர்ந்து ஆதரவு நல்குவதென்று தீர்மானித்துள்ளது,

தொடர்ந்து மந்திரிசபையில் அங்கம் வகிப்பதென்றும் கேரளப் பிரிவு அறிவித்தது.

ராஷ்டிரபதி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக இந்த முடிவை மேற்கொள்ளவேண்டிய சூழ்நிலைக்குள்ளாகியிருப்பதாகவும் கேரளப் பிரிவு புரட்சி சோஷலிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

## கிராமசபை தீர்மானம்

வேலணை, திங்கள்

வேலணை கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் கிராமசபை மண்டபத்தில் தலைவர் திரு. க. சதாசிவம் தலைமையில் நடைபெற்றது

1970-71 ஆண்டுக்கு வேலணை மேற்கு 8-ம் வட்டார முடிப்பிள்ளையார் கோவில் வீதி செப்பனிடும் வேலைக்கும் வேலணை 6-ம் வட்டார கிணறு வேலைக்கும் மற்றும் முதலாம் வட்டார பொதுநூல் நிலையத்தை விஸ்தரிப்பதற்கும், தளபாடம், புத்தகம் வாங்குவதற்கும் பொது விளையாட்டு மைதானத்தை விஸ்தரிக்கவும் காணி சுவீகரிக்க நன்கொடை கோருவதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

......

## நிக்ஸன் அறிவிப்பு

நியூயோர்க், அக். 5

மத்தியதரைக் கடலில் தமது ஆதிக்கத்தை அதிகரிக்கப்போவதாக அயர்லாந்துக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனதிபதி திரு. றிச்சர்ட் நிக்ஸன் அறிவித்தார்.

அங்கு படைப்பலத்தை அதிகரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், படைப்பலம் அதிகரிக்கப்படாவிட்டால் வல்லரசுகளுக்கிடையில் பெரும் சண்டை ஏற்படக் கூடிய அபாயம் உள்ளதென்றும் தெரிவித்தார்.

......

## மலேசிய கலைக்குழு கொழும்பில்

கொழும்பு திங்கள்

மலேசிய சிங்கப்பூரைச் சேர்ந்த கலைக்குழு இம்மாதம் 10, 11-ம் திகதிகளில் கொழும்பு நவரங்கலாவில் கலைநிகழ்ச்சிகள் நடத்தவிருக்கிறது.

மலே சிங்கப்பூர் குழுவில் 17 மலேயரும், 17 சீனரும் உள்ளனர் இவர்கள் பல்வேறு நடன நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்திக் காண்பிப்பர்.

இலங்கை சிறிசேன கலைக்குழுவை மலேயாவுக்கு வருமாறு மலேய சிங்கப்பூர் விமானச் சேவையினர் அழைத்துள்ளனர். இவர்கள் நவம்பரில் கோலாலம்பூர் செல்வார்கள்.

## நவராத்திரி விழா

### பருத்தித்துறையில்

அச்சுவேலி, திங்கள்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பெண்கள் பாடசாலையில் நடைபெற்று வரும் நவராத்திரிவிழாவின் இறுதிநாளான விஜயதசமி தினத்தன்று காலை கலைவாணிக்கு விசேஷ பூசை ஆராதனைகளும், கலாவிநோதன் கே. என். கணபதிப்பிள்ளை குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் நடைபெறவிருக்கின்றது.

### சுழிபுரத்தில்

சுழிபுரம், செவ்,

மாதகல் மேற்கு சனசமூக வாசிகசாலையிலும், பண்ணகம் தெற்கு ஸ்ரீமுருகன் சனசமூக வாசிகசாலையிலும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் நவராத்திரி விழாக் கொண்டாடப்பட்டு வருகிறது.

0 0 0

வழக்கம்பரை அம்மன் கோவிலில் நவராத்திரி விழா நடைபெற்று வருகிறது. தினமும் மாலை 6 மணி தொடக்கம் விசேட பூசைகள், கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவுகள் நடப்பதுடன் இறுதிநாள் இன்னிசைக் கச்சேரி முதலியன நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

### பொலிகண்டியில்

திக்கம் பொலிகண்டி மக்கள் அறிவகத்தினரால் மன்றப் பணிமனையில் கலைமகள் விழா கொண்டாடப்படுகிறது. இறுதி பூசையான இம்மாதம் 9-ந் திகதி விசேஷ மேளக்கச்சேரியும், கலாவிநோதன் கே. என். கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினரின் 'நவராத்திரி மகிமை' வில்லுப்பாட்டும் நடைபெறவிருக்கிறது.

### கொடிகாமத்தில்

கொடிகாமம், திங்கள்

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நவராத்திரி விழா தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

6-ந் திகதி ஆசிரியர் திரு. எஸ். சரவணபவனும் 7-ந் திகதி வித்துவான் மு. சபாரத்தினம், ஆசிரியர் வி. பொன்னையா ஆகியோரும் 8-ந் திகதி திரு. ம. முருகேசுவும் உரை நிகழ்த்துவார்கள்.

9-ந் திகதி திரு. ஏ. ரி. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் விழாவில் சாவகச்சேரி வட்டார கல்வியதிகாரி திரு. வே கந்தசாமி, பண்டிதர் எஸ். சிவலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். செல்வி சௌந்தரவல்லியின், இசை

## "இருளிலிருந்து வெளியேற எம்மை அனுப்புங்கள்"

— காராளசிங்கம்

உடுவில், சனி

"தமிழ்பேசும் மக்களின் நியாயமான ஜனநாயகக் கோரிக்கைகளுக்கான போராட்டம் முழுவதையும் நீண்டகால ஆதிக்கம் செலுத்திய தமிழரசுக்கட்சியினரும், தமிழ்க்காங்கிரஸ்காரர்களும் கேவலமாக்கி உண்மையான கூட்டாளிகளின் அனுதாபத்தை இழந்துள்ளனர். தமிழினத்தை நாடே பார்த்துச் சிரிக்கும் அளவிற்குக் கொண்டுவந்து அவர்களை ஓர் 'இருண்ட காட்டுக்குள் கொண்டுபோய் நிறுத்தியுள்ளார்கள். தமிழினம், இருண்ட காட்டிலிருந்து வெளியேறவேண்டுமானுல் சிங்கள இனத்துடன் ஒன்றுசேர்ந்து உழைக்கும் எம்மவர்களைத் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கவேண்டும்."

இவ்வாறு சுன்னுகத்தில் நடைபெற்ற லங்கா சமசமாஜக்கட்சிக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த திரு. வி காராளசிங்கம் கூறினுர்.

சுன்னுகம் சந்தை மைதானத்தில் உதவி நிதியமைச்சர் திரு. பெர்னுட் சொய்ஸாவை வரவேற்பதற்காக நடைபெற்ற மேற்படி கூட்டத்திற்கு லங்கா சமசமாஜக்கட்சியின் சுன்னுகக் கிளை இளைஞர் இயக்கத் தலைவர் திரு இ வல்லிபுரம் தலைமை வகித்தார். திரு வி காராளசிங்கம் மேலும் பேசியதாவது:

"அதிக பலத்துடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் கூட்டணியினரிடமிருந்து அதிகமான சலுகைகளைப் பெலவும், வேலைவாய்ப்புகளைப் பெறவும், இன்னும் கூட்டணியிலேயே சேரவும் தமிழரசு-காங்கிரஸ்காரர்கள் முயல்கிறுர்கள். ஆனுல் இவர்களுக்கு எந்தச் சலுகைகளையோ பதவிகளையோ வழங்க அரசாங்கம் தயாராக இல்லை. அரசாங்கம் தமிழினத்தில் நம்பிக்கை வைக்கக்கூடியமுறையில் தமிழினம் ஒரு பிரதிநிதியையேனும் இதுவரை தெரிந்தெடுக்காமல்விட்டது வருந்தக்கூடியது. இருண்ட காட்டுக்கு அழைத்துச் சென்ற கட்சிக்காரர்களும் அவர்களைச் சேர்ந்தோரும் ஒருசில காலத்திற்காவது தமது தவறை உணர, கஷ்டம் அனுபவித்தே ஆகவேண்டும்."

## ஜோர்டானில் கைதிகள் பரிவர்த்தனை!
## பரஸ்பரம் உடன்பாடு

அம்மான், அக். 5

ஜோர்டானில் போர்க் கைதிகள் பரிவர்த்தனைக்கு பரஸ்பரம் உடன்பாடு ஏற்பட்டுள்ளது ஜோர்டான் படையினர் பிடித்துவைத்திருக்கும் கொமாண்டோக்களையும், கொமாண்டோக்களிடமிருக்கும் கைதிகளையும் பரஸ்பரம் விடுவிப்பதற்கு ஏற்பட்டுள்ள இந்த உடன்பாட்டைத் தொடர்ந்து பரிவர்த்தனை விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

இருபதினுயிரம் கொமாண்டோத் துருப்புகளை ஜோர்டான் படையினர் சிறைபிடித்து வைத்திருப்பதாகச் செய்தியொன்று தெரிவிக்கிறது,

ஜோர்டானில் இப்போது நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. வீதிகளிலிருந்து ராணுவத்தினர், கொமாண்டோக்கள் விலகிச்சென்று போக்குவரத்து நடைபெறுகிறது.

## பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்.

காரைநகர் நோர்வேகடல் மீன் பதம் செய்யும் நிறுவனத்துக்கு மீன்பிடி அமைச்சரும், பாதுகாப்பு வெளிவிவகார உதவி அமைச்சரும் நேற்றுமுன்தினம் விஜயம்செய்து பார்வையிட்டனர்

வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஏ தியாகராசா, திரு. அல்பிரட் துரையப்பா ஆகியோரும் இவர்களுடன் சென்றிருந்தனர். தகரமீன் உற்பத்தி இங்கு மிகவும் சிறப்பான முறையில் நடைபெறுவதாக அமைச்சர்கள் பாராட்டினுர்கள்.

(கு. வி. ம)

......

## பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக விஷயமாக அரசாங்கத்திடம் சொல்லி தம்மாலான நடவடிக்கைகளை எடுப்பதாகப் பதில் நிதியமைச்சர் திரு. பெர்னுட்சொய்ஸா தெரிவித்தார். சுதந்திரக் கட்சி யாழ், கிளைக் காரியாலயத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நியாயதுரந்தரர் திரு இராஜ ராஜேஸ்வரன் தங்கராஜாவின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே திரு. சொய்ஸா இவ்வாறு சொன்னுர். (கு வி.ம)

## சுதந்திரா அங்கத்தவர்கள்:
# 'தி.மு.க.வுடன் உறவை முறிக்கவேண்டும்!'

திருச்சி, அக். 5

திராவிட முன்னேற்றக்கழகத்துடன் சுதந்திரா உறவை [illegible]

கருத்து பொதுக்கருத்தாக இம்மகாநாட்டில் இருந்தது மூன்று மணிநேரம் இது [illegible]

## 'தீண்டாமையை ஏற்க முடியாது'

சுழிபுரம், திங்கள்

"இவ்வுலகில் நாம் வாழவேண்டுமானுல் பொருள [illegible]

## தற்கொலை

யாழ்ப்பாணம், செவ்.

புத்தூரை சேர்ந்த வெற்றிவேலுதம்பு என்ற 55 வயதான வயோதிபர் நேற்று நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

தம்பு நாச்சிப்பிள்ளைமரண விசாரணையில் சாட்சியமளிக்கையில், இருநாட்களாக கணவன் வீட்டில சண்டை பிடித்ததாகவும், இரவு சாப்பிடவில்லையென்றும் மறுநாள் காலை நச்சுதிராவகம் அருந்தினுரென்றும் கூறினுர். துரைராஜா, பூவா [illegible]

## நீரியல் ஆராய்ச்சி நிலையம்

கோட்டை, திங்கள்

நீர்ப்பாசன, மின்சார, நெடுஞ்சாலை அமைச்சு கண்டியில் நீரியல் ஆராய்ச்சி நிலைய [illegible] ான்றை அமைக் [illegible]

## சுழிபுரம் தபால் கந்தோர்: கி. சபை கோரிக்கை

சுழிபுரம் திங்கள்

சுழிபுரம் தபாற்கந்தோர் தினமும்காலை 7 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் திறந்து கருமங்கள் நடைபெற ஏற்பாடு செய்யும்படி சுழிபுரம் கிராமசபையினா சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர்,

மிகவும் முக்கியமான தொலைபேசி கருமங்களைக் கவனிக்க குறிக்கப்பட்ட நேரத்துக்குப் பின்னர் ஒன்பது மைல் தூரம் போகவேண்டியுள்ளதையும், சுழிபுரம் கிராமசபைப் பகுதியிலுள்ளவர்கள் இதனுல் அதிக கஷ்டமுறுகிறுர்கள் என்பதையும் கிராமசபையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## "உத்தியோகத்திற்காக ஸ்ரீ. ல. சு. கட்சியில்சேராதீர்"

புத்தூர், திங்கள்

"உத்தியோகத்திற்காகவும், சிலசலுகைகள் பெறுவதற்காகவும் எமது கட்சியில் சேரவேண்டாம். நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் நோக்கத்துடன், கட்சியின் கொள்கைகளை ஆராய்ந்து எமது கட்சியில் சேரவேண்டும்."

வடபிராந்திய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மத்திய கமிட்டி அங்குரார்ப்பணக் [illegible]

டாக்டர் பாலகிருஷ்ணன், பொருளாளர்: திரு. வி. செல்வவிநாயகம், உபபொருளாளர்: திரு: இ. பாஸ்கரமூர்த்தி.

14 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவர் ஜனதிபதி கமால் அப்துல் நாஸர் மறைவுக்கு அனுதாபம் தெரிவுக்குமுகமாக இரண்டு நிமிட [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிக்கவேண்டும்!'

திருச்சி, அக். 5

திராவிட முன்னேற்றக்கழகத்துடன் சுதந்திரா உறவை முற்ருக முறித்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டது.

திருச்சியில் நடந்த சுதந்திராகட்சி மகாநாட்டில் இந்தக் கோரிக்கைக்கு பலத்த ஆதரவு தெரிவிக்கப்பட்டது,' தி. மு. க. உறவை முறித்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்து பொதுக்கருத்தாக இம்மகாநாட்டில் இருந்தது மூன்று மணிநேரம் இது சம்பந்தமாக ஆராயப்பட்ட போது பல அங்கத்தவர்களும் தி. மு. க.வின் போக்கை வன்மையாகக் கண்டித்துப்பேசினர்.

தமிழக அரசு சர்வாதிகாரப்போக்கில் செல்வதாகவும் சில அங்கத்தவர்கள் குறிப்பிட்டனர்.

---

# ஓய்வுபெறும் ஆசிரியர்களின் பொறுப்பு பற்றி பண்டிதர்

வேலணை, திங்கள்

''பாடசாலைகள் ஊரின் கண்கள் போன்றவை. பாடசாலைகள் சிறப்பாகவும், திருப்தியாகவும் நடைபெற வேண்டுமானல் தலைமை ஆசிரியர்களினதும் மற்றும் ஆசிரியர்களினதும் திருப்தியான பணியில்தான் தங்கியுள்ளது. எழுத்தறிவித்தவன் இறைவனுகும். மாணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குவது ஆசிரியர்களின் கையில் தான் இருக்கிறது. தாம் எடுத்துக்கொண்ட தொண்டை நல்ல முறையில் செய்துவந்துள்ளார், ஆசிரியர் திரு பொன்னையா'' என திரு கா. பொ. இரத்தினம் எம். பி. வேலணை ஆத்திசூடி வித்தியாசாலையில் தலைமையாசிரியராக இருந்து இளைப்பாறிய திரு ஐ பொன்னையா ஆசிரியரின் சேவை நலப் பாராட்டு விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

''இலங்கையில் தமிழினத்திற்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை. இந்நிலையில் தமிழ் வாழ, தமிழினம் வாழ ஒவ்வொரு கணமும் பாடுபட வேண்டியவர்கள் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் தான். ஆதலால் தான் மொழிக்கும், இனத்திற்காகவும் உழைக்கவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறேன்'' என எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கூறினர்.

மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. அரியரத்தினம் பேசுகையில், ஓர் ஆரம்ப பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராக இருப்பது ஒரு பெரும் பொறுப்பாகும் இப்பொறுப்பை பாராட்டுக்குரியவர் சிறப்பாக நடத்தியுள்ளார் என்ருர்.

திரு நா நடராசா ஆசிரியர் வரவேற்புரை நிகழ்த்தியதையடுத்து ஓய்வுபெறும் தலைமையாசிரியருக்கு எம். பி. பொன்னுடை போர்த்தினர். திரு. இ. நாகராசா ஆசிரியர் பாராட்டுப் பத்திரம் வாசித்தளித்தார்.

ஆசிரியர்கள் சி. இராசரத்தினம், ச. குமாரையா, அ. பொன்னுத்துரை, வே. இராமலிங்கம், சே. தியாகராசா, கவிஞர் தில்லைச்சிவன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

# 'தீண்டாமையை ஏற்க முடியாது'

சுழிபுரம், திங்கள்

''இவ்வுலகில் நாம் வாழ வேண்டுமானல் பொருள் மிகவும் வேண்டியதாகும் என்பதற்காக, பொருளைப் பெறுவது மட்டும் எமது நோக்காகக் கொள்ளக் கூடாது. அருளையும் பெற வேண்டும். பிறர்மீது அன்பு செலுத்துவதன்மூலம இறைவனின் அருள் நமக்குகிடைடும். எம்மில் ஒருபகுதி மக்களை தீண்டாதவர்களாகக் கொள்வது ஏற்க முடியாததாகும்'' என சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர் சமய விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் பண்டிதர் ப. இராசகுரு குறிப்பிட்டார்.

## கலைவிழா

யாழ்ப்பாணம், செவ்,

ஈச்சமோட்டை 'கலைக்கதிர்' மன்றத்தினர் இன்று கலைவிழா ஒன்றைக் கொண்டாடுகின்றனர். இவ்விழாவில் பல நாடகங்கள மேடையேற்றப்படவிருக்கின்றன.

# ஆராய்ச்சி நிலையம்

கோட்டை, திங்கள்

நீர்ப்பாசன, மின்சார, நெடுஞ்சாலை அமைச்சு கண்டியில் நீரியல் ஆராய்ச்சி நிலையமொன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளது.

இந்த நிலயத்தை நிறுவுவதற்காக 50 ஏக்கர் நிலத்தை நீர்படாசனத் திணைகளத்திடம் அமைச்சு கோரியுள்ளது. இந்த நிலையம் இலங்கையின் இரண்டாவது நீரியல் ஆராய்ச்சி நிலையமாகும்.

# இலக்கிய விழா

கோப்பாய், திங்கள்

புத்தூர் கிழக்கு குமரகுருபரன் சனசமூக நிலைய மைதானத்தில் புதுவைத் தமிழிலக்கிய மன்றத்தாரால் இம்மாதம் 6-ம் திகதி இலக்கியவிழா நடாத்தப்படவிருக்கிறது, பல பிரமுகர்கள் உரையாற்றுவர். புதுமை இரத்தினதுரையின் 'வானவில் சிவக்கிறது' என்னும் கவிதை நூல் வெளியீடும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

...இருநாட்க... கணவன் வீட்டில் சண்டை பிடித்ததாகவும், இரவு சாப்பிடவில்லையென்றும் மறுநாள் காலை நச்சுதிராவகம் அருந்தினுரென்றும்கூறினர். துரைராஜா, பூவாதேவி ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

மரண விசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தற்கொலை என்த் தீர்ப்பளித்தார்,

# 'நடவடிக்கை மேற்கொள்ளவும்

மட்டுவில், திங்கள்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் தினமும் மின்சாரத்தடை ஏற்படுவதினுல் இதுபற்றி நடவடிக்கை மேற்கொண்டு இதுபோன்று தொடர்ந்தும் நடைபெருமலிருக்க ஆவன செய்ய வேண்டும் என்று கோரும் கடிதமொன்றை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் நெடுஞ்சாலை மின்சார அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

சாவகச்சேரி வட்டார கல்வியதிகாரி திரு. வே கந்தசாமி, பண்டிதர் எஸ். சிவலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். செல்வி சௌந்தரவல்லியின், இசைவிருந்தும் மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## மாங்குளத்தில்

மாங்குளம் காணி அபிவிருத்திப் பகுதி இந்து மன்றத்தினரால் 2-வது வருடமாகக் கொண்டாடப்படும் நவராத்திரிவிழா இம்முறையும் கொண்டாடப்படுகிறது. இம்மாதம் 9-ந் திகதி மாங்குளம் காணி அபிவிருத்தி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அலங்காரப் பந்தலில நடைபெறவிருக்கும் விழாவில விசேஷ மேளக்கச்சேரியும், சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

## முள்ளியவளையில்

முள்ளியவளை இயல் இசை நாடகமன்றத்தின சார்பில் வித்தியானந்தா திறந்த வெளியரங்கில் இம்மாதம் 10-ம் திகதி கலைமகள்விழா கொண்டாடப்பட விருக்கிறது.

...துடன், கட்சியின் கொள்கைகளை ஆராய்ந்து எமது கட்சியில் சேரவேண்டும்.''

வடபிராந்திய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மத்திய கமிட்டி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைமைவகித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. எம். துரைராசா பேசுகையில் இவ்வாறு கூறினுர்.

கோப்பாய்த் தொகுதியிலுள்ள சகல கிளைகளினதும் ஆதரவில் புத்தூரில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. எம். துரைராசா மேலும் பேசுகையில், கூறியதாவது:-

நாட்டின் பொருளாதார முன்னேற்றம் மக்களின் கையிலேயே இருக்கிறது. கிராமந்தோறும் வாலிபர் சங்கங்கள், மாதர் சங்கங்கள் அமைத்து சிறுகைத் தொழில்களைப் பெருக்கி நாட்டை வளம்பெறச் செய்ய தமிழ்மக்களாகிய நாம் ஒன்று திரண்டு நாட்டில் முற்போக்கு சோஷலிஸ சக்திகளைப் பரப்பவேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற உங்கள் தொகுதிகளில் உள்ள குறைகளை எனக்கு தெரிவியுங்கள். அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு ஆவன செய்வேன்.

வடபிரதேச ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி மத்திய கமிட்டி உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: எம். துரைராசா, உபதலைவர்கள்: திரு. எஸ். கதிரவேலு, திரு. எம், சண்முகசுந்தரம், திரு. எம். சோமசுந்தரம், செயலாளர்: திரு. பெ. மாணிக்கவாசகர், உபசெயலாளர்கள்: திரு. ச. கந்தசாமி, திரு. ச. அம்பிகைபாகன்,

# தீர்ப்பு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, திங்கள்

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த க. காத்தார், அ. மகாலிங்கம்' ஆகியோர் கடந்த ஆவணி மாதம் 4-ம் திகதி அதே இடத்தைச் சேர்ந்த சி. ஆறன் என்ற வயோதிபருக்கு அடித்து பல் உடைத்துப்படுகாயம் விளைவித்ததாக வல்வெட்டித்துறைப் பொலிசாரல் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்டிரேட் தீர்ப்புக்கூறுவதை இம்மாதம் 12-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

...செய்யப்பட்டது.

ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவர் ஜனுதிபதி கமால் அப்துல் நாஸர் மறைவுக்கு அனுதாபம் தெரிவுக்குமுகமாக இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப் பட்டது.

# நாளை மகாசபை கூடுகிறது

யாழ்ப்பாணம், செவ்.

நாளை புதன்கிழமை அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை பொதுச் சபைக் கூட்டம் ஆனைப் பந்தி உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் எம், பி. தலைமையில் நடைபெறவிருக்கிறது.

வரவு செலவு விபரம், அரசியல் நிர்ணயசபைக்கு சமர்பித்த மகஜர் சம்பந்தமாக கூட்டத்தில் ஆராயப்படும். எம். பி. க்கு கார் அன்பளிப்பு நிதியும் வழங்கப்படும்.

# பெற்ருர் எதிர்ப்பு

உடுப்பிட்டி, திங்கள்

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும்படி அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை வடமராட்சிக்கிளை நிறைவேற்றியுள்ள தீர்மானத்திற்குத் தேவரையாளிப் பெற்ருேர்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இத்தீர்மானம் அரசியல் நோக்கோடு செய்யப்பட்டதென்றும், முறையற்றதென்றும் பெற்ருர் ஆசிரியர் சங்கப்பிரமுகரொருவர் தெரிவித்தார்.

## மின்சார தடைக்கு கண்டனம்

மட்டுவில், திங்கள்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதை ஆட்சேபித்து சாவகச்சேரி நகரசபை வரியிறுப்பாளர் நலன்புரிச்சங்கம் ஒரு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றி நகரசபைக்கு அனுப்பி வைத்துள்ளது. திரு. எஸ். கே. மயில்வாகனம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## கூட்டுப்பிரார்த்தனை

வேலணை, திங்கள்

வேலணை அரசடி வைரவர் ஆலயத்தில் நவராத்திரி விழாவை முன்னிட்டு தினமும் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறுகிறது. வேலணை கிராமசீர்திருத்தச் சங்கம் இதனை நடாத்திவருகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நீ எதைச் செய்தாலும் சரி. உனக்கும் உலகுக்கும் உண்மையாக நடந்துகொள்வது உன் கடமை.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 20-ந் திகதி (6-10-70)


## தொழிற்சங்கங்கள்

தொழிலாளரின் நன்மையைப் பாதுகாப்பதற்காகவே தொழிற்சங்கச் சட்டம் வகுக்கப்பட்டது. அவர்கள் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் தொழிலாளரிடையே ஒற்றுமையைப் பலப்படுத்தவும் ஏற்பட்ட தொழிற்சங்கங்களால் தொழிலாளருக்குள்ளாகவே பிளவுகளும் அடிதடிகளும் கிளம்புவதாக இருப்பின், மோசமான அந்த நிலைமையை சீர்செய்யவேண்டியது அரசாங்கத்தின் அவசர கடமையாகும். அவ்வித ஆபத்தான நிலைமை இலங்கையில் இப்போது துரதிருஷ்டவசமாக உருவாகி வருவதைப் பார்க்கின்றோம்.

இந்த அவலநிலை ஏற்படக் காரணமென்ன? இதைச் சீர்செய்து எளிய தொழிலாளரின் நன்மையைப் பாதுகாப்பதெப்படி என்பதைப் பற்றி நாட்டின் நன்மையில் அக்கறை கொண்டவர்கள் பலரும் இப்போது கவலையுடன் யோசித்துவருகின்றார்கள். தொழிற்சங்கங்களால் தொழிலாளருக்குப் பலபல நன்மைகள் ஏற்பட்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. சங்கங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னிருந்த நிலைமையுடன் ஒப்பிடும்போது இப்போது பொதுவாகத் தொழிலாளரின் நிலைமை எவ்வளவோ மேலாகவுள்ளதென்பதில் ஐயமில்லை. ஆனால் அரசியல்வாதிகள் தொழிலாளரைத் தங்கள் கட்சியின் நன்மைக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன் ஒரு தொழிலிலேயே பலபல சங்கங்களை அமைப்பதால், இப்போட்டிச் சங்கங்கள் தொழிலாளரை தற்கொலைக்கு உட்படுத்துவதாக உள்ளன.

ஒரு ஸ்தாபனத்திலே ஏழுபேர் சேர்ந்தால் ஒரு தொழிற்சங்கத்தை அமைத்து அங்கீகாரமும் பெறலாம் என்பது சட்டம். இந்தச் சட்டத்தை இன்னும் மாற்றாமல் இருப்பதால் ஒரு தொழிலிலேயே பல சங்கங்கள் ஏற்படவும், தொழிலாளரிடையே ஒற்றுமையைக் குலைக்கவும், தொழிலையும் குட்டிச்சுவராக்கவும் கூடியதாகவுள்ளது. தொழில் நன்மையையும், தொழிலாளர் நன்மையையும், கருதி, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கமே இருக்கலாமென்று சட்டத்தைத் திருத்தவேண்டியது அவசரமும் அவசியமுமாகும். இதைப்பற்றி ஏற்கனவே இப்பத்திகளில் எழுதியிருக்கின்றோம்.

அரசியல்கட்சிகள் தங்கள் சுயநலத்தைவிட்டு நாட்டின் பொதுநன்மையையே முக்கியமாகக் கருதுவதாயின் இந்த ஏற்பாட்டை புதிய அரசியல் சட்டத்திலேயே சேர்த்துவிடலாம். தொழிற்சங்கப் போட்டிகளால், தொழிலாளர் உரிமைகளைப் பற்றியே நினைக்கின்றார்களேயன்றி, தங்கள் கடமைகளை மறந்துவிடுகிறார்கள். அற்ப காரணங்களுக்காக திடீர்திடீரென்று வேலைநிறுத்தங்களும் சத்தியாக்கிரகங்களும் செய்வதால் தொழிலே சீர்கெடுகின்றது. தொழிலாளரின் நன்மைகளைச் சட்டபூர்வமாகப் பாதுகாக்க வேண்டியதுதான். ஆனால் எதற்கும் ஓர் எல்லையுண்டு. தொழிலாளரிடையே கட்டுப்பாடும், ஒழுங்கும் இருக்கவேண்டியதவசியம். இன்று தொழில் அமைதி பெரிதும் கெட்டுள்ள நிலையில், இந்த அவலநிலையை சீர்செய்யும்வகையில், தக்க சட்ட திட்டங்களைச் செய்ய அரசாங்கம் இனியும் தவக்கம்செய்வது எவ்விதத்திலும் நல்லதன்று.

## கஷ்டநிவாரணம்

# புதிய அரசியல் திட்டம்

# சகல இன, மத கட்சி ஆதரவுடன் வகுக்கப்பட வேண்டும்

தற்போது நடைமுறையில் இயங்கிவரும் இலங்கை அரசியல் திட்டமானது 1948ம் ஆண்டின் இங்கிலாந்துக் கட்டளைச் சட்டத்தின் மூலம் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

இந்த அதிகாரம் முறையே 1799ம் ஆண்டு ஒல்லாந்த நாட்டினரிடமிருந்து கரையோரப்பகுதிகளைப் பெற்ற ஒப்பந்தத்திலிருந்தும் பின்னர் 1815ம் ஆண்டு கண்டி மன்னரை விரட்டி கண்டி மாநிலப் பகுதிகளைபெற்ற ஒப்பந்தத்திலிருந்துமே ஆங்கிலேயருக்கு வந்து சேர்ந்தது.

ஒல்லாந்த நாட்டினர் கரையோரப் பகுதிக்குத் தாம் செலுத்திவந்த அதிகாரத்தைப் போர்த்துக்கீசரிடமிருந்து கைப்பற்றியே பெற்றுக்கொண்டனர்.

இதேபோல் போர்த்துக்கீசரும் தாம் ஆண்டு வந்த கரையோரப் பகுதியை ஐந்திற்கு மேற்பட்ட மாநில மன்னர்களிடமிருந்து அவர்களது ராஜ்யங்களைக் கைப்பற்றியே பெற்றனர்

இந்தராஜ்யங்கள்தொன்றுதொட்டு, நமது சரித்திரம் எழுதப்பட்ட காலத்திற்கு முன்னிலிருந்தே, குவேனியும், நாகரும், இயக்கரும் ஆண்டு வந்த நேரத்திலே விஜயன் இலங்கை மண்ணில் கால்வைத்த காலத்திற்கு முன்னிலிருந்தே இன்றும் கூறப்போனால் இராமாயணம் கந்தபுராணம் போன்ற நமது பண்டைய சமய நூல்களிலேயே குறிக்கப்பட்டிருந்த மிகப்பழைய காலந்தொட்டே ஆதியோடு ஆதியாய் மருவி மறைந்து வருகின்ற புராதான காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளன என்று கூறலாம்,

இப்போதைய அரசியலமைப்பை நாம் மாற்றுவதானால், அம்மாற்றங்களைத் தற்போது இயங்கிவரும் அரசியலமைப்புச் சட்ட முறையைத் தழுவியே கொண்டு வருவது முறையாகும்.

அதாவது நாம் கொண்டு வரவிருக்கும் எல்லா மாற்...

புதிய அரசியல் அமைப்புத்திட்டம் வகுக்கப்படும்பொழுது அதில் என்னென்ன அம்சங்கள் முக்கியமாக இடம்பெறவேண்டுமென ஆலோசனை கூறி அரசியல் திட்ட அமைப்பு அமைச்சருக்கு வழக்குரைஞர் ராஜராஜேஸ்வரன் தங்கராஜா அனுப்பிய கடிதம் இங்கு கட்டுரை வடிவில் தரப்படுகிறது.

— ராஜராஜேஸ்வரன், தங்கராஜா —
(வழக்குரைஞர், பலாலிகனிஷ்ட பல்கலைக்கழக பகுதிநேர சட்ட விரிவுரையாளர்)

திட்ட அமைச்சரவர்கள் 'புதிய அரசியல் திட்டத்தை நாம் உருவாக்கும் போது பழைய அரசியல் திட்டத்தின் அதிகாரம் புறக்கணிக்கப்பட்டு, தற்போதய நிர்ணய சபை அங்கத்தவர்களாய மக்கள் பிரதிநிதி சபை அங்கத்தவர்களுக்கு மட்டுமே புதிய அரசியல் திட்டத்தை வகுக்கும் உரிமையுண்டு ஏனெனில் அவர்கள் பொது மக்களிலிருந்து நேராகத் தமது அதிகாரத்தைப் பெற்றுள்ளார்கள்'' என்ற தோரணையில் பேசியுள்ளார் என வெளிவந்த செய்திகள் உண்மையில் அவருடையவையென்றும் கனம் மந்திரி அவர்கள் அப்படி கூறியிருக்க மாட்டாரென்றும் நான் மனமார நம்புகிறேன்.

எனினும் இப்போ வலியுறுத்த படவேண்டியதுஎன்னவென்றால், தற்போதைய அரசியல் நிர்ணய சபை தானே தனியாகப் புதிய அரசியல் அமைப்பை உருவாக்க முன்னிட்டால் மூதவையையும் அதன் உறுப்பினர்களையும் புறக்கணித்து ஒரு புதிய சட்டத்தை மக்கள் பிரதிநிதி சபையே உருவாக்க முயல்வதை ஒத்ததாகும்.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவென்[றால்] கடந்த தேர்தலின் புள்ளி விபரங்களின் மூலம் வெற்றிபெற்ற அங்கத்தவர்களுக்குக் கிடைத்த புள்ளிகள் [illegible] வாக்காளர்களின் [illegible] தொகையிலும் குறைவாக [illegible]

எதேச்சாதிகாரமாக அதிகாரத்தை அபகரித்து நடைமுறையில் உள்ள அரசியல் திட்ட அமைப்புச் சட்டத்தை மீறி இயங்க முயலுவார்களானால் அது மனநீதிக்கு ஒவ்வாததொன்றாகும் என்பதை மறைக்க முடியாது.

மேற்கூறிய குறிப்புகளுக்கமைய பின்வரும் அம்சங்கள் வகுக்கப்படவிருக்கும் அரசியல் திட்டத்தில் மாற்ற முடியாத அடிப்படை சரத்துக்களாக அமைந்திருக்க வேண்டும் எனக் கூறுகின்றேன்

இதைவிட வகுக்கப்படவிருக்கும் புதிய அரசியல் திட்டம் சாதாரண அல்லது 2/3 பெரும்பான்மை பலத்துடனில்லாமல் சகல இன, மத, கட்சியினருடைய பூரண ஆதரவுடனும் எற்கப்படின் அது சாலச் சிறந்தது ஆகும்.

நாம் தொடர்ந்தும் ஐ.நா. அமைப்பிலும் பொதுநல அமைப்பிலும் அங்கத்துவம் வகிப்பதும் மிகவும் விரும்பத்தக்கதாகும்.

### நான்கு அம்சத் திட்டம்

நமது புதிய அரசியல் அமைப்புத் திட்டம், ஒற்றையாட்சியாகவோ, சமஷ்டி ஆட்சியாகவோ, அல்லது பூரண சுதந்தி[ர]முள்ள ஒன்றிற்கு மேற்பட்ட பிரிவுகளின் கூட்டாட்சியாகவோ இருந்தாலென்ன, பாராளு[மன்ற] முறையையோ அல்லது ஜனாதிபதி முறையையோ கையாண்[டா]லென்ன பின்வரும் சரத்துக்...

அரசகரும மொழிகளாக்கப் படவேண்டும்: அதாவது நிர்வாக, நீதிமன்ற போதனை மொழிகளாக வேண்டும் எல்லா கல்லூரிகளிலும் இரு மொழிகளும் பயிற்றுவிக்கப் படவேண்டும்.

III சுதந்திரமான நீதி பரிபாலனம் இருக்கவேண்டும். நாட்டிலுள்ள சட்டத்துறையினரால் உயர் நீதிமன்ற நீதிபதிகள் தெரிவு செய்யப்படவேண்டும். மற்ற நீதிமன்றங்களின் நீதிபதிகள் அவ்வப்பகுதி வழக்குரைஞர்களால்தெரிவு செய்யப்படவேண்டும்.

IV நீதிமன்றங்களில் அமுல் நடத்தக்கூடிய 12 அம்சங்கள் கொண்ட அடிப்படை உரிமைகள் சாசனம் அரசியல் திட்டத்தில் இடம் பெறவேண்டும் 12 அம்சங்களாவன:

(a) தனிப்பட்ட ஒருவரின் சுதந்திரம், மரியாதை, உயிர் ஆகியவற்றின் உரிமை,

(b) நீதிமன்றத்தில் வழக்காடும் உரிமை-அரசாங்கத்துடன் அல்லது தனிநபர்களுடன்.

(c) பத்திரிகை, பேச்சு, வெளியீட்டுச் சுதந்திர உரிமை.

(d) கூட்டங்கள் நடாத்தவும் தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்கும் உரிமை

(e) நீள் நேர வேலைக் கட்டுப்பாடும், குறைந்த பட்சச் சம்பளக் கட்டுப்பாடும் அமைக்கப்பட்ட உரிமை.

(f) வயதானவரும் வேலையற்றோரும் பென்ஷன் பெறும் உரிமை (அரசாங்கத்திடமிருந்து)

(g) தனியார் முதலீடு வியாபாரம் முதலியன செய்யும் உரிமை

(h) தனியார் சொத்தை வைத்துக்கொள்ளவும் பாதுகாக்கவும் உரிமை.

(i) தாய் மொழி மூலம் கல்வி பெறும்உரிமை. இத்துடன் வடக்கு கிழக்கு மதற்கில் அவ்வப் பகுதியில் மத கலாச்சாரத்தைப் பேணத்தக்க வகையில் இன்னும் மூன்று பூரண பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட வேண்டும்.

(j) இன, மத, தேசிய...

## ஜெயராஜன் எழுதுவது:

ஏழைகளின் நண்பர் என்று புகழ்பெற்ற அமைச்சர் பீட்டர் கெனமனுக்கு 53 வயதாகின்றது. அவரும் அவரது சுயநலமற்ற பணிகளும் நீடூழி வாழவேண்டுமென்று, அவரது தொகுதி மக்கள் மட்டுமன்றி நாட்டுப்பொது மக்களும், அவரது அரசியல் எதிரிகளும்கூட வாழ்த்துவர்.

அரசியலில் சுயநலமின்றி பணிசெய்யக் கூடியவர்கள் மிகக்குறைவு. நீதிஅரசரின் புதல்வரான தோழர் கெனமன் சீமைக்குச் சென்று பாரிஸ்டர் பரீட்சையில் தேறி, இலங்கை திரும்பி பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டார். எழுத்தில் மட்டுமன்றி பேச்சிலும் அவர் வல்லவர். இலங்கைப் பார்லிமெண்டிலே இன்றுள்ள பேச்சாளரில் முன்னணியில் இருப்பவர் அவர். சுயநலமிருக்குமாயின் அவர் பாரிஸ்டர் தொழிலில் ஈடுபட்டு அவர் எவ்வளவோ சம்பாதித்திருக்க முடியும். ஆனால் பொதுமக்களின் தொண்டுக்கே அவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். அவர்மீதுள்ள நம்பிக்கையாலும் அபிமானத்தாலுமே அவரை பொதுமக்கள் தொடர்ந்து ஆதரித்துவருகின்றனர். சற்றும் களைப்பில்லாமல் இரவு பகல் மக்களுக்காகவே உழைக்கின்றார்.

சென்ற தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட தினத்தில் கொழும்பில் செட்டியார் தெருவில் சில காடையர்கள் கலாட்டா செய்ய முயற்சிக்கையில் நேரில் சென்று, ஒருவர் கன்னத்தில் ஓங்கி அறைந்து கலவரம் ஏற்படாதபடி தடுத்துவிட்ட வீரர் அவர். சிறப்பாக சிறுபான்மை மக்கள் அவரைப் பெரும் பாதுகாப்பாக நினைத்துள்ளனர். அவர் வீட்டில் எப்போதும் மக்கள் கூட்டத்தைக்காணலாம். பொதுமக்களுடன் சேர்ந்து, அவர் நீடூழிவாழவேண்டுமென்று பத்திரிகைக்காரர் என்ற முறையில் வாழ்த்துகிறேன்.

0 0 0

சில சாமான்களுக்கு அரசாங்கம் விலைக்கட்டுப்பாடு செய்தாலும், அதைகொழும்பிலேயே பல கடைகள் பகிரங்கமாக மீறிவருகின்றன. கட்டுப்பாடு விலைக்கு பற்... சாமன்கள் நியாயமான விலைக்கு பொதுமக்களுக்குக் கிடைக்கும்படி அரசாங்கம் பார்த்துக் கொள்ளவேண்டும். இதைப்பற்றி விசாரித்ததில் மக்கள் கமிட்டிகள் நியமிக்கப்பட்டால், கள்ள மார்க்கெட்டுகள் பெரிதும் குறையலாமென்று ஓர் அன்பர் தெரிவித்தார். அது எப்போதோ?

0 0 0

'பழைய சிங்கம்'' பிலிப் குணவர்த்தன பத்திரிகை நிருபர்களை அழைத்து 'கர்ஜனை' செய்திருக்கிறார். சென்ற 30 ஆண்டுகளாக பல ஆட்சிகளிலுமிருந்து நாட்டுக்குத் தொண்டு செய்த அவர் இன்று எல்லா அரசியல் கட்சிகளையும் குறைகூறிக் கண்டிக்கின்றார். அரசியலில் நல்ல அனுபவமும், திறமையும் பெற்ற அவரைப் போன்றவர்களின் பணிகள் நாட்டுக்குக் கிடைக்க முடியாமற்போவது நாட்டுக்கு நஷ்டமே.

இந்நாட்டிலே தனிப்பட்டவரோ அல்லது ஒரு ஸ்தாபனமோ வகுப்புவாதத்தைக் கிளப்பிவிட நாங்கள் எந்நிலையிலும் அனுமதியோம் என்று கர்ஜிக்கிறார். வகுப்புவாதத்தால்ஏற்பட்ட தீமையை அவரைப்போல் உணர்ந்தவர்கள் நாட்டில் வகுப்புவாதம் மீண்டும் தலைதூக்க விரும்பமாட்டார்கள்" அந்த மட்டில் நல்லதே.

0 0 0

நீதியை நிறைவை மறை
நான்குடன்
ஓதியை யொருவர்க்கு மறி
வொணாச்
சோதியைச் சுடர்ச்
செம்பொனினம்பலத்
தாதியை யடியேன்
மறந்துய்வனோ.

— அப்பர்.

7-10-70
'ஈழநாடு'
வாரமலரில்
என்னைக்
கொல்ல
வந்தார்கள்
(சுவைமிக்க விசித்திரக் கற்பனை)
க. இந்திரலிங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

...உள்ளன.

...அரசாங்கம் இனியும் தவக்கம் செய்வது எவ்விதத்திலும் நல்லதன்று.

## கஷ்டநிவாரணம்

தோட்டத்தொழிலாளருக்கு பல்லாண்டுகளாக இருந்து வரும்ஒரு பெரிய சங்கடத்தை நீக்க மந்திரி சபை தீர்மானித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். தினச்சம்பள அடிப்படையில் தோட்டங்களிலே வேலைபார்க்கும் தொழிலாளரை ஏதாவது காரணத்தால் வேலையிலிருந்து நீக்கி விட்டால் அவர்கள் குடும்பத்துடன் தோட்டத்திலிருந்து வெளியேறிவிடவேண்டுமென்றும் இல்லாவிட்டால் தோட்டத்தில் அத்துமீறிப் பிரவேசித்ததாகக்கூறி அவர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடுக்கலாமென்பது இப்போது இருந்துவரும் சட்டம். இதனுல் எளிய தொழிலாளரின் குடும்பங்கள் கால் ஊன்றவும் முடியாமல் தவிக்கின்றன. அவர்கள் பல கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இதை நன்கு உணர்ந்த அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வா இனிஅவ்விதம் தொழிலாளரைக் கட்டாயமாக வெளியேற்ற முடியாமல் தடுத்து, அவர்களுக்குக் கஷ்ட நிவாரணம் அளிக்க நகல் சட்டம் தயாரித்துள்ளதை மந்திரிசபை அங்கீகரித்துள்ளது இச்சட்டத்தை சீக்கிரத்தில் நிறைவேற்றி அமுல் செய்தால் லட்சக்கணக்கான தோட்டத்தொழிலாளரின் நன்றிக்கு, குறித்த அமைச்சரும் இந்த அரசாங்கமும் பாத்திரமாகும்.

...தானுல், அம்மாற்றங்களைத் தற்போது இயங்கிவரும் அரசியலமைப்புச் சட்ட முறையைத் தழுவியே கொண்டுவருவது முறையாகும்.

அதாவது நாம் கொண்டு வரவிருக்கும் எல்லா மாற்றங்களும் முதலாவதாக மக்கள் பிரதிநிதிகள் சபையிலுள்ளவரின் மூன்றில் இரண்டுபெரும்பான்மைப் பலத்துடன் ஏற்கப்பட்டு. மீண்டும் மூதவை உறுப்பினரிஞல் முறையாக ஏற்கப்பட்டு கடைசியாக மகாதேசாதிபதியினுல் கைச்சாத்திடப்பட்ட பின்னரே நம்மனைவரையும் கட்டுப்படுத்தக்கூடிய அரசியல் சட்டமாகக் கருதப்படும். இந்த முறையைக் கடைப்பிடித்தால் தான் பிற்காலத்தில் ஒரு சாரார் நாம்மாற்றியமைக்கவிருக்கும் சட்டவிதிகளைக் குழப்பியடிக்காமலிருப்பதற்கு தகுந்த பாதுகாப்பாக இருக்கும்.

புதினப்பத்திரிகைகள் சிலவற்றில் கௌரவ அரசியல் ...கடந்த தேர்தலின் புள்ளி விபரங்களின் மூலம் வெற்றிபெற்ற அங்கத்தவர்களுக்குக் கிடைத்த புள்ளிகள் தோல்வி பெற்ற அபேட்சகர்களின் கூட்டுத்தொகையிலும் குறைவாக இருப்பதே.

இங்ஙனம் குறைந்தளவு வாக்குகளைப் பெற்ற வெற்றியீட்டிய அங்கத்தவர்களே இந்த அரசியல் நிர்ணய சபையில் முக்கிய அங்கத்துவம் வகிக்கின்ருர்கள். ஆனுல் இவர்களிலும் பார்க்கக் கூடிய வாக்குத் தொகையைப் பெற்ற அபேட்சகர்கள் இச்சபையில் அங்கத்துவமில்லாமலும் அரசாங்கத்திலில்லாமலும் புறக்கணிக்கப்பட்டு இருக்கிருர்கள்.

ஆகவே சிறுபான்மை வாக்குகளையே பெற்ற இந்த அரசியல் நிர்ணயசபை அங்கத்தவர்கள், மக்களின் உண்மையான ஒத்துழைப்பைப் பெற்றுள்ளோம் என்று மட்டும் வாய்ப்பேச்சளவில் கூறிவந்ததால் கூட ...லது பூரண சுதந்திரமுள்ள ஒன்றிற்கு மேற்பட்ட பிரிவுகளின் கூட்டாட்சியாகவோ இருந்தாலென்ன, பாராளுமன்ற முறையையோ அல்லது ஜனுதிபதி முறையையோ கையாண்டாலென்ன பின்வரும் சரத்துக்கள் அரசியல் திட்டத்தில் அமையப்பெற வேண்டும்:

I மத சார்பற்ற ஜனநாயக சோஷலிச அரசு நிறுவப்பெற்று (a) இந்நாட்டுப் பிரஜைகளெனக் கருதப்படுபவர்களுக்கும் (b நாடற்றவர் எனக் கருதப்படுபவர்களில் 1948-ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் வசித்து இலங்கையையே தாயகமாகக் கொள்ள விரும்புபவர்களுக்கும் (அவர்களுடைய சந்ததியினர்க்கும்)

சமமான பரிபூரணத்துவ பிரஜா உரிமைகள் வழங்கப்படல்வேண்டும்.

II சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளும் ...டன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அவ்வப் பகுதியில் மத கலாச்சாரத்தைப் பேணத்தக்க வகையில் இன்னும் மூன்று பூரண பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட வேண்டும்.

(j) இன, மத, தேசிய பாகுபாடற்ற முறையில் அரசாங்கத்திலும், இராணுவ சேவைகளிலும் மற்றும் ஸ்தாபனங்களிலும் வேலைவாய்ப்புப் பெறும் உரிமை.

(k) ஜனநாயகக் கோட்பாடுகளுக்கமைய சட்டசபை. உள்ளூராட்சிமன்றங்கள் மற்றும் அரசியலில் உயர் பதவிகள் ஆகியவற்றிற்கான தெரிவு சுதந்திரமாகவும் கிரமமாகவும் நடைபெறும் உரிமை.

(l) இன, மத, ஜாதி, பால் பாகுபாடற்ற முறையில் சகல மக்களுக்கும் அரசியல் பொருளாதார சமூக சமத்துவ உரிமை.

0 0 0

சில சாமான்களுக்கு அரசாங்கம் விலைக்கட்டுப்பாடு செய்தாலும், அதைகொழும்பிலேயே பல கடைகள் பகிரங்கமாக மீறிவருகின்றன. கட்டுப்பாடு விலைக்கு பற்பசை, பாட்டரிகள் டோர்ச் லைர், குடை முதலியவைகளை விற்பதில்லை என்றும் அதிக விலைக்கு விற்பதாயும் புகார்கள் கிடைக்கின்றன.

உள்நாட்டிலே உற்பத்தியாகும் பொருள்கள்மீது அதிகலாபம் வைத்து விற்பதைத் தடுக்கவே விலைக்கட்டுப்பாடு செய்யப்பட்டது. விலையைக்கட்டுப்பாடுசெய்ததும் கள்ளச் சந்தையும் ஆரம்பமாகிவிடும். சாமான்கள் எல்லாம் பதுங்கிவிடும். காகித அளவில் விலையைக் கட்டுப்பாடு செய்வதால், நன்மையைவிட தீமையே அதிகம்.

சிலகடைக்காரர்கள், தங்களிடம் அதிக சரக்குகள் தேங்கி இருப்பதாகவும் உற்பத்தியாளரிடம் அதிகவிலை கொடுத்தே வாங்கியதாயும் திடீரென விலையைக் குறைப்பது தங்களுக்குப் பெரு நஷ்டம் என்றும் கூறுகிருர்கள், உற்பத்தியாளர்கள் பழைய சரக்குகளின் விலையைக் குறைத்தால், தாங்களும் கட்டுப்பாட்டுவிலைக்கு விற்கலாமென்று சிலகடைக்காரர்கள் கூறுகின்றனராம். உற்பத்தியாளர் இப்படிச் செய்யச் சம்மதிப்பாளர்களா?

விலையை ஏட்டளவில் குறைப்பதாக சட்டம்போடுவதால் மக்களுக்கு நன்மை ஏற்பட்டுவிடாது. சரக்குகள் பதுங்கிமறையும். இச்...


என்னைக் கொல்ல வந்தார்கள்

(சுவைமிக்க விசித்திரக் கற்பனை)

த. இந்திரலிங்கம்

வரலாறு கடந்த அன்னை வழிபாடு

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

★

தொழிற்சங்கவாதியுடன் ஒரு சந்திப்பு

பாமா இராஜகோபால்

★

அ. செ. மு.வின் புத்தகப் பூசெண்டு

★

கலைஞர் பேட்டி

★

எங்கள் கிராமம்: 2

கோப்பாய்

புலவர் தமிழ்மாறன்

★

நவராத்திரி சம்பந்தமான விசேஷ கட்டுரைகள், கவிதைகள் மற்றும் நானுவித அம்சங்களுடன் வழக்கமான அம்சங்களும் வெளிவருகின்றன.


## மானிப்பாயில் விரைவில் மக்கள் வங்கி கிளை!

### பதில் நிதி அமைச்சர் தகவல்

உடுவில். திங்கள்

'யாழ்ப்பாணம் செயலகத்தில் இன்று நடைபெற்றஒரு ஆலோசனைக் கூட்டத்தில் மூன்று மக்கள் வங்கிக் கிளைகள் மேலும் யாழ்ப்பாண பகுதியில் நிறுவப்படவேண்டும் என கோரிக்கை விடப்பட்டன ஆனுல் அது மூன்றும் கிடைக்குமா என்று நிச்சயமாக என்னுல் கூற முடியாவிடினும் அதில் ஒன்ருவது நிச்சயம் கிடைக்கும், அந்த ஒன்று மானிப்பாயில் அமையும் என உறுதி கூறுகிறேன்'

பதில்நிதிஅமைச்சர் திரு பெர்ஞட் டி சொய்சா மானிப்பாயில் ஸ்ரீபாரதி சனசமூக நிலையத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

ஸ்ரீபாரதி சனசமூக நிலையத் தலைவர் திரு. எஸ். அப்புத்துரை பதில் அமைச்சரை வரவேற்ருர் உடுவில் எம், பி. திரு. வி. தர்மலிங்கம் லங்கா சமசமாஜக்கட்சி உறுப்பினர் திரு. அ. விசுவநாதன், கம்யூனிஸ்ட் கட்சி வடபகுதி தலைவர் திரு. வ பொன்னம்பலம் ஆகியோரும் திறப்பு விழாவில் கலந்துகொண்டனர்.

பதில் நிதி அமைச்சர் மேலும் பேசியதாவது:-

சனசமூக நிலையங்கள் நல்ல நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவேண்டும் இதற்கான ஒரு நூல் நிலையம் அமைத்தல் அவசியம். இந்திய சஞ்சிகைகள் தடைப்படுத்தப்படும் என சொல்லப்படுகிறது. எல்லா சஞ்சிகைகளும் தடைப்படுத்தப்படமாட்டா. பிரயோசனமற்ற சில சஞ்சிகைகள் தடைசெய்யப்படும். தனிப்பட்ட சினிமாக்காரர்களின் வாழ்க்கைகள் பற்றிய 15-க்கு கூடுதலான பத்திரிகைகள் இங்கு வருவிக்கப்படுகின்றன. இவற்றில் ஒன்றிரண்டு போதுமானவை என நான் கருதுகிறேன்.

பாரதி சனசமூக நிலையத்திற்கு வேண்டிய சஞ்சிகைகளை தான் அன்பளிப்புச் செய்ய விரும்புவதாக தெரிவித்த பதில் அமைச்சர். இந்நிலையத்திற்கான விளையாட்டுத்துறையில் வசதிகள் செய்துதர விளையாட்டுத் துறை அமைச்சருடன் கலந்துபேசுவதாகவும் உறுதியளித்தார்.

மேற்படி நிலைய செயலாளர் திரு. கே. திருநாவுக்கரசு மானிப்பாயில் மக்கள் வங்கிக் கிளை நிறுவித் தருமாறு நிலையத்தின் சார்பில் அமைச்சரை மகஜர் மூலம் கேட்டுக்கொண்டார்.

புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவர்களின்

## குடிதண்ணீர்க் கஷ்டத்தை நீக்க தனிப்பட்டவர் பொறுப்பேற்ருர்

யாழ்ப்பாணம், செவ்.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் தண்ணீர்ப் பிரச்னையை புங்குடுதீவைச் சேர்ந்தவரும் கொழும்பு பிரபல வர்த்தகருமான திரு நா.க மயில்வாகனம் தமது சொந்தச் செலவிலேயே நிறைவேற்றிக் கொடுக்க முன் வந்து அதற்கான வேலைகளும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மகாவித்தியாலய மாணவர்கள் குடிப்பதற்கும் விஞ்ஞான கூடத் தேவைகளுக்கும் தண்ணீர் இலாமல் கடந்த பல வருடங்களாகப் பெரும் துன்பமனுபவித்து வந்தனர்.

மகாவித்தியாலயத்திலிருந்து அரைமல் தூரத்திலுள்ள சுப்பிரமணிய வித்தியாசாலையிலிருந்து குழாய் மூலம் மகாவித்தியாலயத்துக்குத் தண்ணீர் விநியோகம் செய்யப்படவிருக்கிறது சுப்பிரமணிய வித்தியாசாலை வளவில் இதற்கென புதிய கிணறு ஒன்று வெட்டுவதற்கான வேலைகளை திரு. மயில்வாகனத்தின் தந்தையார் திரு நா. கந்தையா நேற்று ஆரம்பித்துவைத்தார்.

பதினையாயிரம் ரூபாய் செலவில் பாடசாலைப் பிள்ளைகளின் குடிதண்ணீர் கஷ்டத்தை நீக்க முன்வந்த திரு. மயில் வாகனத்தின் தர்ம சிந்தையையும் பிறருக்கு தெரியாமல் அவர் தர்மம் செய்து வருவதையும் திரு. சி. இ. சதாசிவம்பிள்ளைபாராட்டிப் பேசினுர். தமது வேண்டுகோளுக்கு இணங்கி இப் பேருதவியைச் செய்ய முன் வந்ததற்காக திரு. மயில்வாகனத்திற்கு மகாவித்தியாலய அதிபர் திரு. கு.வி. செல்லத்துரை நன்றி தெரிவித்தார்.

### சிறுவயதிலேயே

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அயராது உழைத்து வந்தது இக் கல்லூரி வர்த்தக கல்வி பிரிவில் கடந்த 50 வருடகாலமாக, குறிப்பாக இறுதி 10 வருட காலத்துல் தொடர்ச்சியாக உயர்ந்த தரத்தில் இருந்து வந்துள்ளது.

கலை புலவர் நவரத்தினத்தை எனக்குத் தெரிந்தளவில் கூறுவதாயிருந்தால் அவர் வர்ததக கல்வியின் வளர்ச்சிக்காக உழைத்திருக்கிருர், வர்த்தகதுறை பற்றிய நூல்களில் அக்கறை காட்டியிருக்கிருர். வர்த்தக கல்வியின் உயர் பரீட்சைக்கு மாணவர்களுக்கு தகுந்த அறிவூட்டியிருக்கிருர். வர்த்தக கல்விதுறையில் நல்லதொரு அத்திவாரமிட்டிருக்கிருர். தற்பொழுதுள்ள வர்த்தக ஆசிரியர்கள் சிறந்த முறையில் கடமையாற்றி வருகின்ருர்கள். இக் கல்லூரியின் வர்த்தக கல்வி வளர்ச்சிக்கு. சகல வித...

### பகிஷ்கரிப்பு

புங்குடுதீவு, திங்கள்

புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட இரு ஆசிரியர்களின் இடமாற்றத்தை ரத்து செய்யும்படிகோரி மேற்படி மகாவித்தியாலய மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

### பட்டதாரிகள்

கொழும்பு திங்கள்

இம்மாத முடிவுக்குள் 2500 கலை விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் பெறவிருக்கின்றனர்,

சமீபத்தில் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை பிராந்தியக் கல்விக்கந்தோர்களில் நடைபெற்றது. பிராந்திய அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இம்மாதம் 15-ந்திகதி நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

...தயாராக இருக்கிருேம்.

தொழில் நுட்ப பகுதி துணைக் கல்வி மகா அதிபதி கலாநிதி எஸ். எல். டி. சில்வா, வடமாநில கல்வி அதிகாரி திரு. வி. சங்கரலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்திஞர்கள். யாழ் மத்திய கல்லூரி கனிஷ்ட பிரிவினரின் ஓரங்க நாடகம் நடை...

### வண்ணைநகர் இ. மு. கழகம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வண்ணை நகர் இளைஞர் முன்னேற்றக்கழக உறுப்பினர் பொதுச்சபைக் கூட்டம் கழக உபதலைவர் திரு. ஓ. பொன்சாமி தலைமையில் நடைபெற்றது. அண்ணு அறிவகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவர் நாசரின் மறைவுக்கு சில நிமிடங்கள் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

நவராத்திரி இறுதி தினத்தில் அறிவகத்தில் சரஸ்வதி பூசை கொண்டாடுவதெனத் தீரமானிக்கப்பட்டு, இதனைக் கவனிக்க பரா. பால சந்திரனும், சி விவேகானந்தனும் நியமிக்கப்பட்டனர் மற்றும் விளையாட்டு விவகாரங்களில் கழகம் ஈடுபடுவதென்றும், போட்டிகள் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டு இதன் பொறுப்புகள் வெ முத்துக்குமாரு, கோ ஜெகன் மோகன் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டன,

செயலாளர் முத்து மகாலிங்கம் நன்றி தெரிவித்துப் பேசினுர் ......

யாழ்ப்பாணம், செவ்.

யாழ் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நவராத்திரி விழாக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பண்டிதை செல்வி தங்கம்மா - அப்பாக்குட்டி வித்துவான் சு. இ. பொன்னையா பண்டிதர் சி. கார்த்திகேசு பண்டிதர் செ. சிவப்பிரகாசம் வித்துவான் த. வடிவேலு. திரு ப. தியாகராசா ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவர்.




Eau de Cologne
COLIBRI




நோயாளிகளைப் பார்க்கப் போகும்பொழுது

கொலிபிரிஓடிகொலோன் எடுத்துச் செல்லுங்கள்

நான்கு அளவுகளில் கிடைக்கும்

அவ்ரா அன் கோ

19, செட்டியார் தெரு,

கொழும்பு - 11. போன்: 27211

KMJ



இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org